




ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ நவம்பர். 24, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 50 ❖ ரூ.10


'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' மக்கள் குறை கேட்கும் தமிழக அரசு

# அறிமுகம்

## மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள், வட்ட அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்வார்

சென்னை , நவ. 24-

**"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள், வட்ட அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்வர் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரசினால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் மக்களைச் சரியாகச் சென்று அடைகின்றனவா? பல்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா என்பதை முதல்வரே களத்துக்கு நேரடியாகச் சென்று, ஆய்வில் ஈடுபட்டு, அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட திட்டம் தான் களத்தில் முதல்வர் திட்டம். "மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்" என்று சொன்ன அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது.

மக்களுக்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் நலனையும் முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன; செயல்படுத்தப் படுகின்றன. அவற்றின் பலன் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியதும், மக்கள் அரசு நலத்திட்டங்களின் முழுப்பலனையும் அடைவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டியதும் அரசு இயந்திரத்தின் முதன்மையான பணி ஆகும்.

அரசு இயந்திரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற வேண்டும். மக்களையும் அரசையும் இணைக்கும் பாலமாகச் செயல்பட்டு வருபவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள். ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் மக்களும் தங்கள் கிராம முன்னேற்றத்துக்கும், அரசு தொடர்பாக தனக்கிருக்கும் பிரச்சனைகளுக்கும், தீர்வை நாடிச் செல்லும் நபர் மாவட்ட ஆட்சித் தலைவர். தங்கள் அருகில் இருக்கும் பிற அதிகாரிகள் அன்புக்குரியவராக இருப்பினும், மக்களின் மகத்தான அன்புக்கும், ஆதரவுக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக மாவட்ட ஆட்சியர்களைப் பார்க்கிறார்கள். மாவட்ட ஆட்சியர்களிடம் திங்கட்கிழமை தோறும் வந்து மனு அளிக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் பதவியின் கம்பீரம் மக்களைக் கலவரம் அடையச் செய்வதில்லை, மாறாக கவர்ந்திழுக்கிறது.

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்வர். இந்தத் திட்டம், 'களத்தில் முதல்வர்' திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம்; மக்களிடம் செல் என்று சொன்ன அண்ணாவின் கனவுத்திட்டம் என்றும் சொல்லலாம். உங்களை நாடி, உங்களை குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் வருகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல நகைக்கடையில் கணக்கில் வராத பணம், நகை பறிமுதல் : அமலாக்கத் துறை நடவடிக்கை

சென்னை, நவ. 24-

திருச்சியை தலைமையிடமாக கொண்டு சென்னை, கோவை, ஈரோடு, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ப்ரணவ் ஜூவல்லர்ஸ் நகைக்கடை நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், பொதுமக்களிடம் முதலீடு தொகை பெற்று நகை வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், முறையாக வட்டி தொகையும், நகையும் வழங்காமல், அந்நிறுவனம் மோசடி செய்ததாக போலீஸில் பொதுமக்கள் புகார் அளித்திருந்தனர். இதையடுத்து பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப்பதிவு செய்து, அந்நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடத்தினர். இதில் கைப்பற்றப்பட்டவை குறித்து அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:




கடந்த 20-ம் தேதி ப்ரணவ் ஜூவல்லர்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இதில் கணக்கில் வராத ரூ. 23.70 லட்சம் பணம், 11.60 கிலோ தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளது. தங்க முதலீடு திட்டம் என்ற போர்வையில், பொதுமக்களிடம் இருந்து ரூ.100 கோடி வசூலித்ததாக, திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு போலீஸில் ப்ரணவ் ஜூவல்லர்ஸ் நிறுவனத்துக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. விசாரணையில், பொதுமக்களிடம் இருந்து பெற்ற பணத்தை போலிநிறுவனங்களில் முதலீடு செய்து, பொதுமக்களை ஏமாற்றி உள்ளது தெரியவந்துள்ளது. இதுகுறித்து விசாரித்து வருவதாக கூறியுள்ளது.

## கர்நாடக பாஜக தலைவராக விஜயேந்திரா நியமிக்கப்பட்டது நியாயமானது : தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கருத்து

பெங்களூரு, நவ. 24-

கர்நாடக மாநில பாஜக தலைவராக எடியூரப்பாவின் மகன் விஜயேந்திரா நியமிக்கப்பட்டது நியாயமானது என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.



கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பாவின் மகன் விஜயேந்திரா அண்மையில் அம்மாநில பாஜக தலைவராக நியமிக்கப்பட்டார். முதல் முறை எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்ட அவருக்கு அந்த பதவியை வழங்கியதற்கு மூத்த பாஜக தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கர்நாடக பாஜக ஒரு குடும்பத்துக்கு மட்டுமே சொந்தமாகிவிட்டதாக விமர்சித்துள்ளனர்.

இதுகுறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை பெங்களூருவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "விஜயேந்திரா எடியூரப்பாவின் மகனாக பிறந்தது பெரிய குற்றமா? எடியூரப்பாவின் மகன் என்பது தற்செயல் நிகழ்வு ஆகும். அதனை மட்டும் வைத்துக்கொண்டு விஜயேந்திராவை விமர்சிப்பது நியாயமற்றது. அவர் கர்நாடக மாநிலத்தின் துணைத் தலைவர் உட்பட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். அப்போது சிறப்பான முறையில் பாடுபட்டு, கட்சிக்கு நற்பெயரை ஈட்டி தந்துள்ளார்.

இதேபோல இளைஞர் பாஜகவின் தலைவராகவும் இருந்துள்ளார். அந்த சமயத்தில் விஜயேந்திரா நாடு முழுவதும் பயணித்து, மூத்த தலைவர்களுடன் பழகியுள்ளார். அந்த அனுபவத்தை பயன்படுத்தி மக்களவைத் தேர்தலில் அதிக இடங்களில் வெல்ல பாடுபடுவார். எனவே அவரது நியமனம் நியாயமானது தான்'' என்று அண்ணாமலை தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி சாலை இந்திரா நகரை இணைக்கும்

## சென்னையின் முதல் 'U' வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை : நவ. 24, ஓஎம்ஆர் சாலையில் ரூ.108 கோடி மதிப்பிலான இந்திரா நகர் சந்திப்பு 'U' வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.




ராஜீவ் காந்தி சாலை மற்றும் ஈசிஆர் சாலையை இணைக்கும் டைடல் பார்க் சிக்னல் சந்திப்பு மற்றும் இந்திரா நகர் சிக்னல் சந்திப்பை கடக்க குறைந்தபட்சம் சாதாரண நேரங்களில் 20 நிமிடம் வரை ஆகிறது. அதே நேரத்தில் பீக் அவர்சில் 30 நிமிடம் முதல் 40 நிமிடங்கள் வரை ஆகிறது. இந்தச்சாலையில் போக்குவரத்து நெரிசலைக்குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கிடையே நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஆய்வு நடத்தி டைடல் பார்க் மற்றும் இந்திரா நகர் ரயில் நிலையம் அருகே மேம்பாலம் கட்ட பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி டைடல் பார்க் மற்றும் இந்திரா நகர் ரயில் நிலையம் அருகே U வடிவில் ரூ.108 கோடியில் மேம்பாலம் அமைக்க 2019 ஜூலை மாதம் அரசு அறிவித்தது. நவம்பர் மாதத்தில் ரூ.108.13 கோடி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. 2020ல் பணிகள் தொடங்கப்பட்டது.

இந்திரா நகர் சந்திப்பு மேம்பாலம் 12.5 மீட்டர் நீளமுள்ள 19 தூண்களை கொண்ட மேம்பாலம் ஆகும். இருபுறமும் 120 மீட்டர் நீள அணுகுசாலை அமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிந்து சோதனை ஓட்டமும் நிறைவடைந்தது. சோழிங்கநல்லூர் திசையில் இருந்து திருவான்மியூர் செல்லும் வாகனங்கள் டைடல்பார்க் சந்திப்பில் போக்குவரத்து சிக்னலுக்காக காத்திருக்காமல் இந்திராநகர் மேம்பாலம் வழியாக ஏறி U டர்ன் செய்து, இந்திராநகர், அடையாறு மற்றும் திருவான்மியூர் செல்ல இயலும்.

டைடல் பார்க் சந்திப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பாலம் 12.5 மீட்டர் நீளமுள்ள 16 தூண்கள் கொண்ட மேம்பாலம் ஆகும். இந்த பாலத்தினை ஒட்டி ராஜீவ் காந்தி சாலையின் இருபுறமும் 90 மீட்டர் நீள அணுகு சாலையும், தரமணி சிஎஸ்ஐஆர் சாலையில் 140 மீட்டர் நீள அணுகு சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது கட்டுமான பணிகள் நிறைவுற்றுள்ளது. சோதனை ஓட்டம் நடைபெற உள்ளது. இந்நிலையில் ஓஎம்ஆர் சாலையில் இந்திரா நகர் சந்திப்பில் U வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 10.30 மணிக்கு தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

## மக்களுக்கு அனைத்துவகை பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்வதை அரசு உறுதி செய்ய வேண்டும் : டிடிவி தினகரன்

சென்னை : நவ. 24, மக்களுக்கு அனைத்து வகையான பால் பாக்கெட்டுகளையும் விற்பனை செய்வதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் நேற்று தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது: "பொதுமக்கள் அதிகளவு விரும்பி பருகும் பச்சை நிற பால் பாக்கெட்டுகளின் விற்பனையை திடீரென நிறுத்த முடிவு செய்திருக்கும் ஆவின் நிர்வாகத்தின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது. பொதுமக்கள் விரும்பும் அனைத்து வகையான பால்பாக்கெட்டுகளையும் விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்.

குறைந்து வரும் பால் கொள்முதல், ஊழல், முறைகேடு என பல புகார்களில் சிக்கித் தவிக்கும் ஆவின் நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை போக்க, 4.5 சதவிகித கொழுப்புச்சத்துள்ள பச்சை நிற பால் பாக்கெட்டுகளின் விற்பனையை நிறுத்திவிட்டு, 3.5 சதவிகித கொழுப்புச் சத்துள்ள ஊதா நிற பால் பாக்கெட்டை விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதாக ஊடகங்களிலும் நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் ஆவின் பால் விலையை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைப்பது போல குறைத்துவிட்டு, பால் பொருட்களின் விலையை வரலாறு காணாத அளவுக்கு உயர்த்தியிருக்கும் திமுக அரசு, பொதுமக்களின் நீண்டகால பயன்பாட்டில் இருக்கும் பச்சை நிற பால் பாக்கெட்டுகளை திடீரென நிறுத்துவதன் மூலம் அதனை பருகிவந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட வழிவகை செய்யும் என பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

எனவே, நஷ்டத்தில் இயங்கும் ஆவின் நிர்வாகத்தின் வருவாயை பெருக்க மாற்று ஏற்பாடுகளை செய்வதோடு, பொதுமக்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஆரஞ்சு, நீலம், பச்சை, ஊதா ஆகிய நான்கு விதமான பால் பாக்கெட்டுகளை ஆவின் நிர்வாகம் விற்பனை செய்வதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தமிழ்நாடு முதலமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்." என்று டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் இந்திய தூதரகம் மீதான தாக்குதல் பஞ்சாப், ஹரியாணா மாநிலத்தில் 14 இடங்களில் என்ஐஏ சோதனை

புதுடெல்லி : நவ. 24, சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்திய தூதரகம் மீதான தாக்குதல் தொடர்பாக பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் 14 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை சோதனை நடத்தினர்.




அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது கடந்த மார்ச் 19-ம் தேதி காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர். காலிஸ்தான் ஆதரவு முழக்கத்துடன் தூதரக வளாகத்தில் 2 காலிஸ்தான் கொடிகளை பறக்கவிட்டனர். இந்தக் கொடிகள் உடனடியாக அகற்றப்பட்டன.

இதையடுத்து கடந்த ஜூலை 2-ம் தேதி, சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள அதே தூதரகத்தை காலிஸ்தான் ஆதரவாளர்கள் தீவைத்து எரிக்க முயன்றனர். கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) விசாரித்து வருகிறது. இந்த விசாரணை தொடர்பாக என்ஐஏ அதிகாரிகள் கடந்த ஆகஸ்ட் மாதம் சான்பிரான்சிஸ்கோ சென்று வந்தனர்.


இந்த தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான தகவல்களை திரட்டவும் குற்றவாளிகளை அடையாளம் காணவும் என்ஐஏ அதிகாரிகள் முயன்று வருகின்றனர். இந்நிலையில் இந்த தாக்குதல் தொடர்பாக பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் 14 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை சோதனை நடத்தினர். இதுகுறித்து என்ஐஏ செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

பஞ்சாபில் மோகா, ஜலந்தர், லூதியானா, குர்தாஸ்பூர், மொஹாலி, பாட்டியாலா ஆகிய மாவட்டங்களிலும் ஹரியாணாவில் குருஷேத்ரா, யமுனாநகர் ஆகிய மாவட்டங்களிலும் இந்த சோதனை நடைபெற்றது. மார்ச் 19, ஜூலை 2 ஆகிய தேதிகளில் நடந்த தாக்குதல்களின் பின்னணியில் உள்ள முழு சதித்திட்டத்தை கண்டறிய இந்தசோதனை நடத்தப்பட்டது, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்கள் கொண்ட டிஜிட்டல் தரவுகள் மற்றும் பிற ஆவணங்கள் இந்த சோதனையில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அதிகாரி கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## "அப்போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?"

# கேசிஆரின் இந்திரா ராஜ்ஜியம் குறித்த விமர்சனத்து கார்கே பதிலடி

புதுடெல்லி : நவ. 24, பசுமைப் புரட்சி, மதிய உணவு போன்ற முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோது கே.சந்திரசேகர ராவ் எங்கே இருந்தார் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார். இந்திரா காந்தியின் ஆட்சி குறித்த கேசிஆரின் விமர்சனத்துக்கு பதிலடியாக கார்கே இவ்வாறு கேட்டுள்ளார்.

இந்த மாத இறுதியில் தேர்தல் நடக்க உள்ள தெலங்கானாவின் நல்கொண்டா மற்றும் ஆலம்பூர் ஆகிய இடங்களில் நடந்த காங்கிரஸின் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் கார்கே கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "பசுமைப் புரட்சி, 20 அம்ச திட்டம், வங்கதேச விடுதலை இவைகளுடன் இந்திரா காந்தியின் ஆட்சியில் தலித்துகளுக்காக ஆதரவாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் கேசிஆர் இந்திரா காந்தி மீதும் அவதூறு சொல்கிறார். இந்திரா காந்தி காலத்தின் வறுமை பற்றி சந்திரசேகர ராவ் கேள்வி எழுப்புகிறார்.



பசுமைப் புரட்சி, மதிய உணவு போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட போது நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் கேசிஆர். இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் அவர் மோடியுடன் அமர்ந்து கொண்டு அவதூறு மட்டும் பேசுகிறார்.

இந்த சட்டப்பேரவைத் தேர்தல் தெலங்கானா மக்களுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. இந்தத் தேர்தலில் நாங்கள் ஏழை மக்களின் நிலங்களைப் பறித்தவர்களுக்கு எதிராக போட்டியிடுகிறோம். தெலங்கானாவில் மக்கள் விரும்பும் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. சாலைவசதிகள், பள்ளிகள், நீர்பாசனத் திட்டங்கள் ஏதுவும் நிறைவேற்றப் பட்டவில்லை.

கேசிஆர் மக்களைச் சந்திக்காமல், அவரின் பண்ணை வீட்டில் இருந்து முடிவுகளை எடுக்கிறார். மக்களைச் சந்திக்காதவர்களுக்கு, அவர்களுடன் இல்லாதவர்களுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். கேசிஆர், பாஜக, அசாதுதீன் ஒவைசி ஆகியோர் நண்பர்கள். அவர்கள் மூவரும் ஒன்றிணைந்து காங்கிரஸுக்கு எதிராக வேலை செய்கிறார்கள். நாக்பூரில் உள்ள ஆர்எஸ்எஸின் தலைமை அலுவலகத்துக்கு சென்ற போது மோடியுடனான தனது நட்பினை தெரிவித்தார். ஒவைசி, கேசிஆர் அவரின் நல்ல நண்பர் என்று கேசிஆரை தொடர்ந்து புகழ்ந்து வருகிறார்" என்று கார்கே பேசினார்.

முன்னதாக, பிஎஸ்ஆர் கட்சியின் பிரச்சாரக்கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை பேசிய மாநில முதல்வர் கேசிஆர், "காங்கிரஸ் கட்சியினர் மீண்டும் இந்திராம்மா ராஜ்ஜியத்தை கொண்டு வருவோம் என்று வாக்குறுதி தருகின்றனர். அந்த ஆட்சி அவசர நிலையால் மட்டுமே நினைவுகூறப்படுகிறது தலித்துகளின் நிலைமை இன்றும் அப்படியேதான் இருக்கின்றது என்று குற்றம்சாட்டியிருந்தார்.

# "ரெட் டைரி' காங்கிரஸ் கட்சியின் ஊழலின் அடையாளமாக மாறிவிட்டது" – அமித் ஷா குற்றச்சாட்டு

ஜெய்ப்பூர் : நவ. 24, "எல்லா துறைகளிலும் தோல்வியடைந்து வரும் காங்கிரஸ் அரசுக்கு ராஜஸ்தான் மக்கள் பிரியாவிடை அளிக்கும் எண்ணத்தில் உள்ளனர்" என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் நவம்பர் 25ஆம் தேதி சட்டப்பேரவைத்தேர்தல் நடைபெற உள்ளது. வாக்குகள் டிசம்பர் 3ஆம் தேதி எண்ணப்படும். இந்த நிலையில், இம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலை ஓய்வடைந்தது. ராஜஸ்தானில் ஆட்சியைப் பிடிக்க பிரதமர் நரேந்திர மோடியை முன்னிலைப்படுத்தி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோர் இணைந்து சூறாவளி பிரச்சாரம் செய்து வருகின்றனர்.



இந்த நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில், "கடந்த 6 மாதங்களாக நான் ராஜஸ்தானுக்கு வந்து செல்கிறேன். இந்த மாநிலத்தில் அடுத்து பாஜக ஆட்சியமைக்கும் என்பதை நம்பிக்கையுடன் கூற விரும்புகிறேன். மூலை முடுக்கெல்லாம் மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் தோல்வியடைந்துவரும் காங்கிரஸ் அரசுக்கு ராஜஸ்தான் மக்கள் பிரியாவிடை அளிக்கும் எண்ணத்தில் உள்ளனர்.

ரெட் டைரி காங்கிரஸ் கட்சியின் ஊழலின் அடையாளமாக மாறிவிட்டது. இந்திய வரலாற்றில் இதுமாதிரியான விசியங்கள் இதுவரை நடந்ததேஇல்லை. அமைச்சர் அலமாரியில் ரூ.2.35 கோடி ரொக்கம் மற்றும் 1 கிலோ தங்கம் சிக்கியது. ஆனால் முதல்வர் அசோக் கெலாட்டிடம் இருந்து எந்தவித எதிர்வினையும் வரவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் சாப்ரா, பில்வாரா, கரௌலி, ஜோத்பூர், சித்தோர்கர், நோஹர், மேவாட், மல்புரா மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் திட்டமிட்ட கலவரங்கள் நடந்துள்ளன. ஆனால் வாக்கு வங்கி அரசியலுக்காக கெலாட் அரசு கலவரக்காரர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரெட் டைரி குறித்து அசோக் கெலாட்டிடம் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். அவர்கள் அதற்கு ஏன் பயப்படுகிறார்கள்?" என்றார்.




# தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி காலமானார்

கொல்லம் : நவ. 24, தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி (96) உடல் நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். இந்திய உச்ச நீதிமன்ற முதல் பெண் தலைமை நீதிபதி, தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் என பல்வேறு சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் இவர்.

கேரள மாநிலம் பத்தனம்திட்டாவைச் சேர்ந்தவர் பாத்திமா பீவி. தோலிகட் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி படிப்பை முடித்தவர். திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் அறிவியல் பட்டப்படிப்பை படித்தார். இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் நீதிபதி என்ற பெருமையைப் பெற்றார். கேரள மாநிலத்தில்



நீதிபதியாகப் பணியாற்றிய பின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக உயர்ந்தார்.

1997-ல் தமிழக முதல்வராக கருணாநிதி இருந்த போது அவரது ஆலோசனையின் பேரில் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்ட பாத்திமா பீவி 2001-வரை ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்திலும் அந்தப் பதவியில் நீடித்தார். இந்தநிலையில், உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த பாத்திமா பீவி நேற்று காலை காலமானார்.

# அதிமுக கூட்டணியில் இல்லை அதிர்ச்சி கொடுத்த ஜி.கே.வாசன்

திண்டுக்கல் : நவ. 24, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தற்போது எந்த கூட்டணியிலும் இல்லை என கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜகவுடன் இணைந்திருந்த அதிமுக, சமீபத்தில் கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது. அதிமுக தலைவர்கள் குறித்து பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிர்வினையாற்றும் வகையில் அதிமுக இந்த முடிவை எடுத்திருந்தது. இதையடுத்து இரு கட்சிகளும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்திருந்த பிற கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்கிற கேள்வி எழுந்துள்ளது. திண்டுக்கல்லில் நடைபெற்ற கட்சி பிரமுகர் இல்ல



விழாவில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் ஜி.கே. வாசன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஜி.கே.வாசன், "தமிழ் மாநில காங்கிரஸை பொறுத்தவரை தமிழ்நாட்டில் தற்போது யாருடனும் கூட்டணி கிடையாது. நாங்கள் மட்டுமல்ல பாமக, தேமுதிக உள்ளிட்ட எந்த கட்சியும் தற்போது யாருடனும் கூட்டணி கிடையாது. தமிழ் மாநில காங்கிரசை பொறுத்தவரை ஜனவரி மாதம் தான் கூட்டணி குறித்து அறிவிப்போம். தற்போது நாங்கள் அதிமுகவுக்கும், பாஜகவுக்கும் நட்பு கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

மேலும் "தமிழகத்தில் அதிமுக, பாஜக இடையே கூட்டணி அமைப்பது தொடர்பாக ஜோசியம் சொல்ல முடியாது. வட மாநிலங்களில் நடைபெறும் தேர்தலில் பாஜகவின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. வரும் நாடாளுமன்ற தேர்தலில் எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்றால் சரியான வியூகம் தேவை. ஒத்த கருத்தோடு கடைப்பிடித்தால் எதிரியை வீழ்த்தலாம். கட்சிகள் யார் எந்த கூட்டணியில் சேர்கிறார்கள் என்பதை என்னால் கணிக்கமுடியாது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "தமிழகம் முழுவதும் பரவலாக நல்லமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் காய்ச்சல், வைரல் காய்ச்சல், ப்ளூ காய்ச்சலால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து மாவட்ட தலைநகர் மட்டுமல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா அளவில் தடையில்லாமல் மருத்துவ வசதி செய்து தர வேண்டும். தேவையான அளவு மருந்துகளை வழங்க வேண்டும்" என்று கூறினார்.

# திமுக எம்.பி கதிர் ஆனந்துக்கு அமலாக்கத்துறை சம்மன் : பரபரப்பில் அறிவாலயம்

சென்னை : நவ. 24, சட்ட விரோத பண பரிமாற்றம் தொடர்பான விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என திமுக எம்.பி. கதிர் ஆனந்திற்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. செந்தில் பாலாஜிக்கு அடுத்தப்படியாக கதிர் ஆனந்தை அமலாக்கத்துறை கைது செய்யப் போகிறதா என திமுகவினர் அச்சத்தில் உள்ளனர்.

திமுக மூத்த அமைச்சரும், பொதுச் செயலாளருமான துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்த் சட்ட விரோத பண பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக கூறி, கடந்த 2019ம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது, கதிர் ஆனந்திற்கு நெருக்கமானவர்களின் வீடு, சிமெண்ட் கிடங்குகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் மற்றும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.



அதில், வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய பதுக்கி வைத்திருந்த ரூ.11.55 கோடியை பறிமுதல் செய்தனர். இது குறித்து வழக்கு பதிந்த அமலாக்கத்துறை தற்போது விசாரணை மேற்கொண்டு வருகிறது. விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென கதிர் ஆனந்துக்கு சம்மன் அனுப்பட்டுள்ளது. ஏற்கெனவே செந்தில் பாலாஜி அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட நிலையில் அவருக்கு ஜாமீன் கிடைக்காமல் போராடி வருகிறார். அந்த வகையில், கதிர் ஆனந்தும் இணைந்து விடுவாரோ என்ற அச்சத்தில் திமுகவினர் உள்ளனர்.

# 12 ஆண்டுகளுக்கு பிறகு மதுரை கள்ளழகர் கோயில் ராஜகோபுரம் கும்பாபிஷேகம் கோலாகலம்

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு சாமி தரிசனம்

மதுரை : நவ. 24, மதுரை கள்ளழகர் கோயில் ராஜகோபுரம் கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. மதுரையின் அடையாளமான சித்திரைத் திருவிழாவின்போது அழகர் வைகை ஆற்றில் இறங்குவார். அழகர் கள்ளர் வேடத்தில் வருவதால், அழகர் என்ற பெயர் கள்ளழகர் என மாறியது.



தென்திருப்பதி என்று அழைக்கப்படும் கள்ளழகர் கோவில். கடந்த 2011ம் ஆண்டு இங்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது, மதுரை கள்ளழகர் கோயில் ராஜகோபுரம் கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'கோவிந்தா' கோஷம் விண்ணை பிளக்க இந்த கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது.

7 நிலைகளை கொண்ட இந்த ராஜகோபுரம் வர்ணங்கள் பூசப்பட்டு ஜொலிக்கிறது. ஆறரை அடி உயரம் கொண்ட 7 கலசங்கள் பொருத்தப்பட்டுள்ளன. யாகசாலையில் வைத்து பூஜை செய்யப்பட்ட புனிதநீர் ராஜகோபுர கலசங்களில் ஊற்றப்பட்டது. ஏராளமான பக்தர்கள் குவிந்ததால், அனைவரும் விழாவை காண தடுப்புகள் அமைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 18-ம் படி கருப்பண்ண சுவாமி கோயில் ராஜகோபுரம் குடமுழுக்கு நடைபெற்றது. விழாவையொட்டி கள்ளழகர் கோவில், ராஜகோபுரம், 18-ம் படிகளுக்கு மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இந்த ராஜகோபுரம் 628 சிற்பங்களை தாங்கி பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.

120 அடி உயரம் கொண்ட ராஜகோபுரத்தில் ரூ.2 கோடி மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடுக்காய், சுண்ணாம்பு, பனங்கற்கண்டு ஆகிய பொருட்களை கொண்டு புனரமைக்கப்பட்டுள்ளது. மதுரையில் இருந்து சற்றேறக்குறைய 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அழகர் மலை. அழகர் மலையிலிருந்து வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் என்று அழைக்கக்கூடிய கள்ளழகர் கி.பி. 1558ம் ஆண்டு விஜயநகர பேரரசர் காலகட்டத்தில் திருக்கோவில் உருவாக்கப்பட்தாக கூறப்படுகிறது. அழகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தை யொட்டி, மதுரை மாநகரமே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

# சிப்காட் போராட்டம் : அனைத்து விவசாயிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் – இரா.முத்தரசன் வலியுறுத்தல்

சென்னை : நவ. 24, "மேல்மா சிப்காட் நில எடுப்பு எதிர்ப்புப் போராட்டம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று, சிறையில் உள்ள அனைத்து விவசாயிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். நில எடுப்பு நடவடிக்கை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, விவசாயிகளின் பிரதிநிதிகளிடம் அரசு பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண வேண்டும்", என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதி மேல்மா உள்ளிட்ட சுற்று வட்டார விவசாயிகள் அரசின் நில எடுப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடி வருகின்றனர். கடந்த ஜூலை மாதம் இரண்டாம் தேதி அரசு நில எடுப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விவசாயிகள் காத்திருப்பு போராட்டம் தொடங்கியுள்ளனர். அந்தப் போராட்டம் அமைதியாக நீடித்து வந்த நிலையில் தொடர்புடைய அதிகாரிகள், அரசுப் பிரதிநிதிகள், விவசாயிகள் உணர்வுகளை



உள்வாங்கி பிரச்சினைக்கு தீர்வு காண தவறியதால் போராட்டம் அடுத்த கட்டம் நோக்கி தீவிரமானது.

தீவிரமான போராட்டத்தை காவல்துறை மூலம் ஒடுக்கிவிடலாம் என்ற முறையில் போராடிய விவசாயிகள் மீது கடுமையான சட்டப் பிரிவுகளில் 11-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்து, 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து, சிறையில் இருந்த 7 விவசாயிகள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, அதற்கான உத்தரவுகளை சிறையில் இருந்தவர்களிடம் வழங்கிய செய்தி, போராடி வந்த விவசாயிகளை ஆத்திரமுட்டியது. போராட்டத்தை மேலும் விரிவான பகுதிக்கு நெட்டித் தள்ளியது.

இந்தச் சூழலில் சிறையில் இருந்து வரும் விவசாயிகளின் குடும்பத்தினர் முறையிட்டனர் என்ற பெயரில் அரசு கடுமையான நிபந்தனைகள் விதித்து 6 விவசாயிகள் மீது குண்டர் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயம், போராட்டத்தை ஒருங்கிணைத்து, வழி நடத்தி வரும் அருள் மீது போடப்பட்ட குண்டர் சட்டம் தொடர்கிறது. இது தவிர விவசாயிகள் மீதான வழக்குகளும் தொடர்கின்றன.

அரசின் நடவடிக்கை செய்யாறு பகுதியில் அமைதி திரும்ப உதவவில்லை என்பதை அரசு கவனத்துக்கு தெரிவித்து, விவசாயிகள் மீதான மேல்மா சிப்காட் நில எடுப்பு எதிர்ப்புப் போராட்டம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று, சிறையில் உள்ள அனைத்து விவசாயிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் எனவும், நில எடுப்பு நடவடிக்கை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, விவசாயிகளின் பிரதிநிதிகளிடம் அரசு பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண வேண்டும் எனவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முதல்வரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது, என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.



புதுச்சேரி அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் கல்வித்துறையின் சார்பாக தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வாக கோத்துக்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் "பண்பாட்டு இணைக்க நாள்" மற்றும் கலாச்சார கலை நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தெற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.ஹெச் நாஜிம் கலந்து கொண்டு மாணவர்களிடையே அன்னை இந்திரா, மகாத்மா காந்தி, நேரு இவர்களைப் போன்று எடுத்துக் காட்டாய் வாழவேண்டும் என்றும் இரும்புப் பெண்மணியாக திகழ்ந்த அன்னை இந்திரா காந்தியை நாம் இன்றும் நினைத்துப் பார்க்கிறோம் மாணவர்கள் இதற்கு உதாரணமாக தேசப்பற்றுடன் வாழ வேண்டுமென மாணவர்கள் மத்தியில் பேசினார். முன்னதாக வட்டம் 1 ஆய்வாளர் முனைவர் பொன் சௌந்தரராசு வரவேற்புரை வழங்கினார். காரைக்கால் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி திருமதி விஜய மோகனா தலைமை தாங்கினார். இவ்விழாவில் பல அரசு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி கலாச்சாரத் திருவிழா மற்றும் கலாச்சார உணவுகளும் காட்சிப்படுத்தப்பட்டன. இறுதியாக தலைமை ஆசிரியர் சங்க தலைவர் காளிதாஸ் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியினை கோத்துக்குளம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அமலோற்பவமேரி மற்றும் ஆசிரிய பெருமக்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



வேலூர் மாவட்ட சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் அன்னை கியூரி மகளிர் தையல் கூட்டுறவு சங்கத்திற்கு மாநில அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கத்திற்கான விருது புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் பெருமக்களால் வழங்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியனிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். உடன் தொழில் கூட்டுறவு அலுவலர் ஓம்பிரகாசம் மாவட்ட சமூக நல அலுவலர் (பொறுப்பு) மைதிலி உள்ளனர்

திருவொற்றியூரில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமை

# வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தொடங்கி வைத்தார்



சென்னை,நவ,24

சென்னை திருவொற்றியூரில் மாநகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது பெருநகர சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் ஒன்றாவது மண்டல குழு தலைவர் திமு தனியரசு தலைமையில் திருவெற்றியூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தொடங்கி வைத்து மக்களிடம் கோரிக்கை மனுக்கள் குறித்து கேட்டறிந்தார்.


மாநகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் குறை தீர்ப்பு முகாமில் 300க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ,குடிநீர் வழங்கல் துறை ,ஊரக வளர்ச்சித்துறை ,காவல்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நல மற்றும் மகளிர் உரிமைத்துறை ,ஆதி திராவிட நலத்துறை, பிற்படுத்தோர் நலத்துறை ,கூட்டுறவுத்துறை உள்ளிட்ட துறைகளை ஒன்றிணைத்து ஒரே இடத்தில் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண மக்களுடன் முதல்வர் திட்டம் நடைபெற்றது.


முதியோர், கைம்பெண், கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளி, முதிர் கண்ணி, மூன்றாம் பாலினத்தோர் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர் சொத்து வரி ,குடிநீர் வரி பெயர் மாற்றங்கள் புதிய குடிநீர் கழிவுநீர் இணைப்பு நில அபகரிப்பு மோசடி வரதட்சனை மற்றும் இதர புகார்கள் கட்டுமான வரைபட ஒப்புதல் நில உபயோக மாற்றுத்திற்கான ஒப்புதல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடத்தில் வீடு வேண்டி விண்ணப்பித்தல் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் புதுமைப்பெண் கல்வி உதவி திட்டம் கல்வி உதவித்தொகை உள்ளிட்ட துறைகளில் அதிகமான மனுக்கள் பெறப்பட்டு 30 நாட்களில் மனுக்கள் கொடுக்கப்பட்டவர்களுக்கு குறுஞ்செய்தி அவர்களுக்கு அனுப்பப்பட்டுதீர்வுகாணப்படும் என திருவொற்றியூர் மண்டல உதவி ஆணையர் நவேந்திரன் மாநகராட்சி அதிகாரி தெரிவித்தார்.



திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 15-ம் தேதி கன்னியாகுமரியில் இருசக்கர வாகன பிரச்சார பேரணியை துவக்கி வைத்தார். இந்நிலையில்,நேற்று திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒதப்பை,சித்தஞ்சேரி, ஊத்துக்கோட்டை, பெரியபாளையம்,கன்னிகைபேர்,ஜனப்பன் சத்திரம், புதுவாயல்,கும்மிடிப்பூண்டி, பெத்திக்குப்பம்,தச்சூர் கூட்டுச்சாலை,மாதவரம், பொன்னேரி, உத்தன் கண்டிகை,மீஞ்சூர்,வல்லூர் வழியாக இந்த இருசக்கர வாகன பிரச்சார பேரணி சென்னைக்கு சென்றது. இந்நிகழ்ச்சிக்கு,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சிக்கு,எல்லாபுரம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி.ஜே.மூர்த்தி,ஆ.சத்தியவேலு, சோழவரம் ஒன்றிய கழக செயலாளர் வழதிகை செல்வசேகரன், கும்மிடிப்பூண்டி ஒன்றிய கழக செயலாளர் கே.வி. ஆனந்தகுமார் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இதில்,மாநில, மாவட்ட,ஒன்றிய,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கொருக்குப்பேட்டையில் அனுமதி இன்றி சூதாட்ட விடுதி நடத்திய தந்தை மகன்: உட்பட சூதாட்டத்தில் ஈடுபட்ட 21 பேர் கைது





சென்னை,நவ,24

சென்னை கொருக்குப்பேட்டை ஏகாம்பரம் தெருவில் பிரண்ட்ஸ் மனமகிழ் மன்றத்தில் பணம் வைத்து சூதாட்டம் நடைபெறுவதாக வண்ணாரப்பேட்டை காவல் துணை ஆணையர் சக்திவேலுக்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவலின் பேரில் வண்ணாரப்பேட்டை துணை தனிப்படை போலீசார் மற்றும் துணை ஆணையர் சக்திவேல் சூதாட்ட கிளப்பிற்கு விரைந்து சென்று சூதாட்ட கிளப்பில் பணம் வைத்து விளையாடிக் கொண்டிருந்த 13 பேரை கையும் களவுமாக போலீசார் கைது செய்தனர்.

இவர்கள் பணத்திற்கு பதிலாக பண மதிப்பை குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் கூடிய டோக்கன் வைத்து சூதாட்டம் விளையாட்டை வந்தது தெரியவந்தது சூதாட்ட கிளப்பிற்கு வருபவர்கள் பயோமெட்ரிக்முலம் கைரேகை பதிவு செய்தவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனை அடுத்து சூதாட்டம் கிளப் நடத்தி வந்த வண்ணாரப்பேட்டை பார்த்தசாரதி தெருவை சேர்ந்த சத்யா அவருடைய மகன் வழக்கறிஞர் சுதாகர் மற்றும் ஊழியர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் உள்ளிட்ட 21 பேரை போலீசார் கைது செய்தனர் அவர்களிடமிருந்து 34 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் சேர் டேபிள் சீட்டு கட்டு டோக்கன் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர் இதனை அடுத்து 21பேர் மீதும் கொருக்குப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

சீர்காழி அருகே மீனவ கிராமத்தில்

# மழையால் இடி தாக்கி 25 க்கும் மேற்ப்பட்ட வீடுகளில் வீட்டு உபயோக மின் சாதன பொருட்கள் சேதம்



மடவாமேடு,நவ,23

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே மடவாமேடு மீனவ கிராமத்தில் விடியற்காலை முதல் கனமழை பெய்து வருகிறது. அப்போது திடீரென இடி தாக்கியது. இதில் அப்பகுதியில் மின் கம்பம் வழியாக வீட்டு உபயோக மின்கம்பியில் உயரழுத்த மின்சாரம் ஏற்பட்டு 25 க்கும் மேற்பட்ட வீட்டில் பயன்படுத்திக் கொண்டிருந்த மீட்டர் பாக்ஸ் வெடித்து சிதறியது. வீட்டில் இருந்த வயர்கள் அனைத்தும் எரிந்து புகை சூழ்ந்தது. பயத்தில் வீட்டில் இருந்தவர்கள் அலரி கொண்டு வெளி ஓடி வந்தனர்.

பின்னர் வீடுகளுக்கு சென்று பார்த்த போது தொலைக்காட்சி பெட்டி, மின்விசிறி, மிக்ஸி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின் , கிரைண்டர், இன்வெட்டர் உள்ளிட்ட 10லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோக பொருட்கள் பழுதாகின.

மேலும் பழுதடைந்த வீட்டிற்கு மின் வயர்கள் புதிதாக சரி செய்து இணைப்பு கொடுக்கும் பணியில் வருவாய்துறையினர் ஈடுபட்டுள்ளனர். பழுதடைந்த பொருட்களை கணகெடுப்பு செய்து அரசு உரிய நிவாரணம் வழங்க கிராம மக்கள் கோரிகை விடுத்துள்ளனர்.



18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் அனைவரும் வாக்காளராக பதிவிட வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்தி காரைக்காலில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வரும் நிலையில் நேற்று காரைக்காலில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் இருந்து மாவட்ட துணை தேர்தல் அதிகாரி செந்தில்நாதன், தலைமையில் கொடியசைத்து இருசக்கர வாகன பேரணியை துவக்கி வைத்தார். இப்பேரணி நெடுங்காடு தொகுதி வழியாக திருநள்ளாறு தொகுதி மற்றும் காரைக்கால் தெற்கு மற்றும் காரைக்கால் வடக்கு தொகுதி வழியாக மீண்டும் ஆட்சியரகம் வந்தடைந்தார்கள். சுமார் 15 கிலோமீட்டர் தூரம் சென்ற இவர்களுடன் பொதுமக்களுக்கும் மாணவ, மாணவிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் ஒலிபெருக்கி மூலம் பிரச்சாரம் செய்து கொண்டு சென்றார்கள். மேலும் இப்பேரணியில் தொழிற்சாலை ஆய்வாளர் ஞானவேல் மற்றும் ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் மற்றும் தொழிற்சாலைகள் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் என். எஸ். எஸ். மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டார்.

திருநள்ளாறில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆலயத்தில்

# சனிப்பெயர்ச்சி விழாவிற்க்கான பந்தக்கால் முகூர்த்தம் பல்வேறு சர்ச்சைகளுக்கு பின்னர் நேற்று நடைபெற்றது



திருநள்ளார்,நவ,24

காரைக்கால் அடுத்த திருநள்ளாறில் அமைந்துள்ள உலக புகழ்பெற்ற ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ சனிபகவான் ஸ்தலத்தில் 2 1/2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சனிப்பெயர்ச்சி விழா வெகுவிமரிசையாக நடைபெறும். அவ்வாறு இந்த ஆண்டு டிசம்பர் 20ஆம் 05.20 மணிக்கு மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பிரவேசிக்க உள்ள சனிப்பெயர்ச்சி விழாவிற்க்கான முன்னெடுப்பு பணிகளுக்காக பந்தக்கால் முகூர்த்தம் நடைபெற்றது. இந்த பந்தக்கால் முகூர்த்தம் சென்ற மாதம் 27ம் தேதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமிதேவஸ்தானத்தின் உள்துறை தருமை ஆதீனத்தின் கட்டுப்பாடு எனவும் மற்றும் மற்ற அனைத்து முடிவுகளும் அரசு சார்பில் சிறப்பு அதிகாரி தருமை ஆதீன பிரதிநிதியை கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட வேண்டியது என 2012ல் உயர் நீதிமன்ற தீர்ப்பு உள்ளதால் இந்த தேவஸ்தானத்தில் நடைபெறும் அனைத்து முடிவுகளும் இருதரப்பினரும் சேர்ந்து முடிவு செய்யப்பட வேண்டியது.

ஆனால் இம்முறை ஆலய நிர்வாக சார்பில் தருமபுர ஆதீன கட்டளை விசாரணை ஸ்ரீ ல ஸ்ரீ கந்தசாமி தம்பிரான் சுவாமிகளுடன் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக தேதி குறிப்பிட்டு பின்னர் தம்பிரான் சுவாமிக்கு இவ்விழாவிற்க்குஅழைப்பு விடுக்கப்பட்டது. தருமபுர ஆதீனத்தை ஆலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவு என்பதால் தம்பிரான் சுவாமிகள் பந்தக்கால் முகூர்த்ததில் பங்கேற்காததால் ஐந்து கிராம மக்கள் இவ்விழாவினை புறக்கணித்ததால் பூஜைக்கு தயார் நிலையில் இருந்தும் பந்தக்கால் முகூர்த்தம் நடைபெறவில்லை. அப்போதே ஆதினத்தின் தரப்பில் வேறு தேதியில் மாற்றி அமைக்கப்படும் என ஆலய நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஆதினம் சார்பில் நீதிமன்றத்தை நாடினர் அதற்கு புதுச்சேரி அரசு விளக்கம் அளிக்க கோரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தொடர்ந்து ஆலய நிர்வாகம் சார்பில் ஆதினத்துடன் ஆலோசித்து இன்று பந்தக்கால் மூகூர்த்தம் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

காரைக்காலில் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் சார்பில்

# வாழை இலையில் நிலக்கரியை உணவாகப் பரிமாறி நூதன போராட்டம்



காரைக்காலில்,நவ,23

திருவண்ணாமலை செய்யாறு மேல்மா சிப்காட் தொழிற்பூங்காவிற்காக விவசாய நிலம் ஆர்ஜிதம் செய்வதை எதிர்ப்பதுஉள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காரைக்காலில் வாழை இலையில் நிலக்கரியை உணவாகப் பரிமாறி நூதன போராட்டம் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் சார்பில் புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. இயக்கத்தின் தலைவர் டாக்டர் எஸ்.ஆனந்த்குமார் தலைமை தாங்கினார்.

விவசாய நிலங்கள் படிப்படியாக காணாமல் போனால் நம் வம்சாவளிகள் மற்றும் நம் சந்ததிகளின் எதிர்கால அவல நிலைமையை வரும் முன் காப்போம் என்ற அடிப்படையில் இன்றே அனைவருக்கும் உணர்த்தும் விதமாக வாழை இலையில் நிலக்கரியை உணவாக பரிமாறும் நூதன போராட்டம் நடை பெற்றது.

திருவண்ணாமலை செய்யாறு மேல்மா சிப்காட் தொழிற்பூங்கா திட்டத்தை எதிர்த்தும், ஏழு விவசாயிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்ததை வன்மையாக கண்டித்தும், அவர்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வலியுறுத்தியும், கிருஷ்ணகிரி விவசாயி அருள் விடுதலை செய்யக் கோரியும், மேலும் அந்த விவகாரத்தில் இருக்கும் ஊழல் குற்றச்சாட்டு மீதும், மற்றும் புதுச்சேரி அரசின் பஜன்கோவா வேளாண் கல்லூரியின் ஊழல்கள் மீதும் மத்திய உள்துறை சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும், தமிழகம் மற்றும் புதுச்சேரி விவசாய நிலங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும், காரைக்கால் விவசாயிகளுக்கு நெல் கொள்முதல், உரிய விலை, பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு இழப்பீடு, டாடா மாஜிக் ஓட்டுனர்கள் வாகனங்களை நிறுத்த புதிய பேருந்து நிலையத்தில் இடம், போக்குவரத்து துறை, நகராட்சி, சார்ப் பதிவாளர், வருவாய் துறைகளில் நிலவும் லஞ்ச குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை தேவை என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி பொது கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சந்திரசேகர்,செல்லதுரை, சபாபதி, ரங்கராஜன் சிறப்பாக செய்திருந்தனர். முன்னதாக தலத்தெரு மோகனசுந்தரம் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் திருப்பட்டினம் ராஜதுரை நன்றியுரைத்தார்.

நிகழ்ச்சியில் பல்வேறு விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் நிருவாகிகளான பத்தக்குடி ராஜேந்திரன், வரிச்சிக்குடி சோமு, நெடுங்காடு ராஜேந்திரன், ஐயப்பன் மற்றும் மகேந்திரன், மேலபொன்பேத்தி ராஜேந்திரன், அத்திப்படுகை குருமூர்த்தி, சேத்தூர் பண்டாரவாடை கண்ணபிரான், காரைக்கால் வீரராகவன், மேலும் தமிழகத்தை சேர்ந்த கிள்ளை ரவீந்திரன், ஆயக்காரன்புலம் வை. பார்த்தசாரதி, நகை தமிழ்ச்செல்வன், பனங்குடி விஜயராஜ், சக்திவேல், நரசிங்கநத்தம் ஞானப்பிரகாசம், தமிழ் தேசிய பேரியக்க காரை மாவட்ட செயலாளர் சூர்யா மற்றும் விவசாயிகள், பொது மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு உரையாற்றினர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட தலையுடையவர்கோவில்பத்து கிராமத்தில் உள்ள தாமரைகுளத்தில் ஆகாயத்தாமரை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் வேளாண்மை துறை இணை இயக்குநர் சேகர், நீர்வளத்துறை செயற்பொறியாளர் சண்முகம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மஞ்சுளா, வட்டார வளர்ச்சிஅலுவலர்கள் மீனா, மஞ்சுளா, தரங்கம்பாடி வட்டாட்சியர்சரவணன் உள்ளனர்.

தரங்கம்பாடி மற்றும் சீர்காழி வட்டத்தில்

# மழைநீர் வெளியேற்றும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு



மயிலாடுதுறை, நவ-24:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் கிடாரங்கொண்டான் கிராமத்தில் மழைநீர் சூழ்ந்து வடிந்துள்ள சம்பா சாகுபடி நெற்பயிர்களை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட தலைச்சங்காடு கிராமம் காந்தி நகரில் உள்ள வடிகால்வாய்க்கால் பகுதியினை பார்வையிட்டு, தங்குதடையின்றி மழைநீர் செல்வதற்கு ஏதுவாக வாய்க்கால்களில் செடி, கொடிகள் அகற்றப்பட்டுள்ளனவா என்பதனை ஆய்வு செய்தார். பின்னர், தலையுடையான் கோவில்பத்து கிராமத்தில் உள்ள தாமரைகுளத்தில் ஆகாயத்தாமரை அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, சீர்காழிவட்டம்பழையார் கிராமத்தில் சுனாமி குடியிருப்பு பகுதியில் மழைநீர் சூழ்ந்துள்ளதாக செய்தி பெறப்பட்டதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக சென்று பழையார் கிராமத்தில் உள்ள சுனாமி குடியிருப்பு பகுதியில் சூழ்ந்துள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், இனிவரும் காலங்களில் சுனாமி குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழாத வகையில், தேவையான வடிகால் வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அப்பகுதி மக்களிடம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, வேளாண்மை துறை இணை இயக்குநர் சேகர், நீர்வளத்துறை செயற்பொறியாளர் சண்முகம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மஞ்சுளா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (தரங்கம்பாடி) மீனா, மஞ்சுளா, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தியாகராஜன்,அருள்மொழி, வட்டாட்சியர் இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சீர்காழி அருகே பூம்புகார் சுற்றுலா மையத்தில் சுற்றுலாத்துறை ஆணையர் ஆய்வு

சுற்றுலா மையத்தில் நடந்து வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை பார்வையிட்டார்



பூம்புகார்,நவ,24

மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழிஅருகே வரலாற்று சிறப்புமிக்க பழமைவாய்ந்த பூம்புகார் சுற்றுலா தளம் அமைந்துள்ளது. கோவலன், கண்ணகி, மாதிரி வாழ்க்கை வரலாற்றை கூறும் வகையில் சிலப்பதிகாரக்கூடம் அமைந்துள்ளது.

கடந்தபத்தாண்டுகால ஆட்சியில் சிதலமடைந்து கேட்பார் அற்று கிடந்த பூம்புகாரை, திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு சுற்றுலா மையத்தை உலகளவில் தரத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளர்ச்சி பணிகளை செய்து வருகிறது.

ரூ. 23கோடி ரூபாய் செலவில் புதிதாக விடுதி அறைகள், சுற்றுலா பயணிகள் காத்திருப்பு கூடம், உணவகம், பார்க்கிங், கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு சுற்றுலாத்துறை அமைச்சர் இந்த பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த நிலையில், தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை ஆணையர் காக்கர்லா உஷா பூம்புகார் சுற்றுலா மையத்திற்கு வந்தார்.

தொடர்ந்து நடக்கும் கட்டுமான பணிகளை ஆய்வு மேற்கொண்டார். சிலப்பதிகாரம் கூடம், கலங்கரை விளக்கம், கண்ணகி சிலை உள்ளிட்டவைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பூம்புகார் சுற்றுலா தளத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.23 கோடி செலவில் இங்கு புதிதாக கட்டிடம் கட்டப்படும் இடம், விடுதி உணவகம், அலுவலகம், உள்ளிட்ட பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் இங்கு நடந்து வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து பணிகளை தரமாகசெய்து முடித்திட அதிகாரியிடம் உத்தரவிட்டார்.

# சிந்தாமணியில் விஜய் மக்கள் இயக்கம் சார்பாக மாணவர்களின் பயன்பாட்டிற்கு புதிய நூலகம் திறப்பு



தென்காசி,நவ.24-

தென்காசி மாவட்டம் புளியங்குடி சிந்தாமணியில் திருமங்கலம்- கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் தென்காசி மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் சார்பாக புஸ்ஸி ஆனந்த் தூண்டுதலின் பேரில் பொதுமக்களுக்கும், படிக்கும் மாணவர்களின் முற்போக்கு சிந்தனையை வளர்க்கும் விதத்திலும், குரூப் 1, குரூப் 2, குரூப் 4 , தகுதிதேர்வுகளுக்கு பயன்படும் விதத்தில் தென்காசி மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் பொருப்பாளர், எஸ். ராஜகோபால் தலைமையில் புதிய நூலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் சிவா, தென்காசி மாவட்ட தொண்டர் அணித்தலைவர் நியாஸ், முகமது கான், சுபைர், சரவணன், தவிடு, மணிமாறன், சந்தோஷ், ரவி, இசக்கிமுத்து, லட்சுமணன், ராமர், ஹமீத், சிவசங்கர் மற்றும் தென்காசி மாவட்ட இளைஞரணி தலைவர் எஸ். மாரியப்பன், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று சால்வை அணிவித்து நூலகத்தை திறந்து வைக்க ஏற்பாடு செய்தார். மேலும் ஒன்றிய, நகர, நிர்வாகிகளும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி மாவட்ட கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கலைஞர் அறிவாலயத்தில் சாம்பவர் வடகரை சேர்ந்த ஜெயச்சந்திரன் என்ற மாணவர் இந்தோனேசியாவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற மாணவரை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர்வே. ஜெயபாலன் மாணவரை நேரில் அழைத்து பாராட்டினார் மேலும் பதக்கங்கள் பெற வாழ்த்தினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், விவசாய அணி அமைப்பாளர் கோமதிநாயகம், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஹக்கீம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கருப்பண்ணன், அச்சம்பதூர் பேரூர் கழகச் செயலாளர் வெள்ளத்துரை, ஆதிதிராவிட நலத்துறை குழு அமைப்பாளர் பரமசிவன், சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் இஞ்சி இஸ்மாயில், ஐடி வின் ஒருங்கிணைப்பாளர் அழகு தமிழ் சங்கர் ,வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி, சாம்பார் வடகரை மாறன், முத்துக்குமார், சுதன்,அயலகஅணிதுணை அமைப்பாளர் ராமராஜ், தொண்டரணி துணை அமைப்பாளர் குற்றாலம்எ.சுரேஷ், முருகன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அண்ணாமலை, கடையநல்லூர் காளிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் செங்கோட்டை ரஹீம், செங்கோட்டை நசீர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஷேக் தாவுது,இலஞ்சி பேரூர் கழக செயலாளர் முத்தையா, கொட்டாங்குளம் பரமசிவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முன்னாள் ஆளுநரும், உச்சநீதிமன்ற நீதிபதியான

# முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவருமான பாத்திமா பீவி மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை : நவ. 24. தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதி, தமிழக ஆளுநர் போன்ற பதவிகளை வகித்தவர் பாத்திமா பீவி. இவருக்கு வயது 96. உடல் நலக்குறைவு மற்றும் வயது மூப்பு காரணமாக கேரள மாநிலம் கொல்லம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி பாத்திமா பீவி காலமானதாகத் தகவல் வெளியாகியுள்ளது. காலமான பாத்திமா பீவி உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி என்ற பெருமையையும், முதல் இஸ்லாமிய பெண் நீதிபதி என்ற பெருமையையும் பெற்றவர்.



இவர் தமிழகத்தின் 11வது ஆளுநராக கடந்த 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் தேதி முதல் 2001 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி வரை பதவி வகித்துள்ளார். பாத்திமா பீவி 1950 ஆம் ஆண்டு கேரள மாநிலத்தின் கீழமை நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டு முன்சீப் கோர்ட் நீதிபதியாகப் பணியாற்றி உள்ளார். இதனையடுத்து மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி, மாவட்ட அமர்வு நீதிபதியாகப் பணியாற்றி கடந்த 1983 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்; தமிழ்நாடு முன்னாள் ஆளுநரும், உச்சநீதிமன்ற நீதிபதியான முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவருமான பாத்திமா பீவி அவர்கள் மறைந்தார் என்றறிந்து வருந்துகிறேன். உச்சநீதிமன்ற நீதிபதி,தேசியமனிதஉரிமைகள் ஆணைய உறுப்பினர். கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர். தமிழ்நாடு ஆளுநர் எனப் பல உயர்பொறுப்புகளில் பணியாற்றியுள்ள பாத்திமா பீவி அவர்களது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

# அரியலூரில் நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்து மேம்படுத்த மா.கம்யூ கோரிக்கை

அரியலூர்,நவ.24-

அரியலூரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த கோரிக்கை விடப்பட்டுள்ளது, இது பற்றி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி அருணன், வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

இரண்டாவது முறையாக அரியலூர் மாவட்டம் உருவாகி, 16 ம் ஆண்டில் உள்ளோம். இதை கொண்டாடும் வேளையில், ஒரு சில பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும்.

அரியலூர் மாவட்டத் தலைநகரத்தை மேம்படுத்திட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாககட்டிடத்தை விரைவில் அமைத்திட வேண்டும். மாவட்ட தொழிலாளர் துறை அலுவலகங்கள், மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களில், குறுகிய இட வசதியோடு இயங்கி கொண்டு உள்ளது, அவற்றுக்கு சொந்த கட்டிடம் கட்டி கொடுக்க வேண்டும்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள, அரியலூர் நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்திட வேண்டும். அரியலூர் பேருந்து நிலையம் முதல், அரசு மருத்துவமனை, முக்கிய அலுவலகங்கள், ரயில் நிலையம் மற்றும் முக்கிய வீதிகள் வழியாக, மினி பஸ் இயக்கி, அவை செல்ல போதுமான சாலைகளை அமைத்து, போக்குவரத்து நெரிசலை தவிர்க்க வேண்டும்.

சுண்ணாம்புக்கல் சுரங்கங்களிலிருந்து, சிமெண்ட் ஆலைக்களுக்கு லாரிகள் செல்ல, தனி சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வேலைவாய்ப்பு, சுகாதாரம் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்திட வேண்டும். கோரிக்கைகளை வென்றெடுப்போம், அரியலூரை மேம்படுத்திடுவோம், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ புதுக்கோட்டை டாக்ஸி மார்க்கெட் அருகில் அமையப் பெற்றுள்ள ஸ்ரீ ஆறுபடை ஷண்முகர் சுவாமி ஆலயத்தில் கார்த்திகை மாத திருநாளை முன்னிட்டு சுவாமிக்கு பல்வேறு அபிஷேகங்கள் மகா தீபாராதனை நடைபெற்று மாலையில் சந்தன காப்பு மலர் அலங்காரத்தில் ஸ்ரீ ஆறுபடை சண்முகர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சுவாமியை தரிசனம் செய்தனர்

# மதுரை திருப்பரங்குன்றம் அருகே தனியார் பள்ளியில் அறிவியல் கண்காட்சி




மதுரை,நவ.24-

மதுரை திருப்பரங்குன்றம் அருகே தனியார்பள்ளியில் 4 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் அப்பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் போட்டிபோட்டு தங்களது திறனை வெளிப்படுத்தி பலவிதமான கண்டுபிடிப்புகளை, கண்காட்சியில் பார்வைக்காக சமர்ப்பித்தனர்.இதில் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள், வாக்கிங் ஸ்டிக் இல்லாமல் நடந்து செல்லும் ஷூ இதனை மாற்று திறனாளிகள் நடந்து செல்லும் பொழுது திடீரென பள்ளம் மற்றும் குறுக்கே ஏதாவது இருந்தால் முன்கூட்டியே அலாரம் அடிக்க கூடிய காலணிகள் கண்டுபிடிப்பு பார்வையாளர்களை கவர்ந்தன.

மேலும், தொட்டிலில் குழந்தை அழும் பொழுது சத்தம் கேட்டு தானாக தொட்டிலை ஆட்டும் சென்சார் கருவிகள், அதேபோன்று குழந்தைகள் உறங்கும் போது தொட்டிலில் இருந்து சிறுநீர் கழித்தாலும் , அதற்கான சென்சார் கருவியை வைத்து தொட்டிலை ஆட்டி வைக்கும் சென்சார் கருவிகளையும், வீட்டு காலிங் பெல் அடித்தால் வீட்டின் உரிமையாளருக்கு கைப்பேசி குறுந்செய்தி வரும் புதிய . கருவியினையும் மாணவ, மாணவியர்கள் தங்களது தனித்திறனை வெளிக்கொணரும் விதத்தில் கண்காட்சியில் இடம்பிடித்தன.



▶ சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சி பகுதியிலுள்ள தனியார் மண்டபத்தில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு முன்னோடி முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் வ.மோகனச்சந்திரன், தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியர் சோ.பால்துரை, திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# நெல்லையில் மாநகராட்சி கவுன்சிலர்கள் 3 பேர் உட்பட 4 பேர் திமுகவில் இருந்து அதிரடியாக சஸ்பெண்ட்

நெல்லை, நவ. 24-

ல்லையில் மாநகராட்சி கவுன்சிலர்கள் 3 பேர் உட்பட 4 பேர் திமுகவில் இருந்து அதிரடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், திருநெல்வேலி மாநகராட்சி 6வது வார்டு உறுப்பினர் பவுல்ராஜ், 20வது வார்டு உறுப்பினர் மன்சூர், 24வது வார்டு உறுப்பினர் ரவீந்தர் மற்றும் 7வது வார்டைச் சேர்ந்த மாநகர பிரதிநிதி ஆர். மணி (எ) சுண்ணாம்பு மணி ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு



அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுகிறார்கள்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நெல்லை மாநகராட்சியில் வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும் பொதுமக்கள் குறைதீர் முகாமில் மனு கொடுப்பதற்காக ஆளுங்கட்சி திமுக கவுன்சிலர்கள் 20 பேர் வந்திருந்தனர். ஆனால் முகாமில் மேயர், துணை மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையர் யாரும் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெறவில்லை. ஒருசில அதிகாரிகள் மட்டுமே மனுக்களை பெற்றனர். இதனால் திமுக கவுன்சிலர்கள் மனுக்களுடன் மாநகராட்சி பிரதான அலுவலக வாசலில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. குடிநீர், சாலை பிரச்சினை உட்பட மக்களின் பிரச்சினைகளுக்கு மேயர் குரல் கொடுப்பதில்லை என்றும் கவுன்சிலர்களை மதிக்காமல் மேயர் நடந்து கொள்வதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

# ஜம்மு – காஷ்மீரில் தீவிரவாதிகளுடனான மோதலில் 4 வீரர்கள் உயிரிழப்பு

புதுடில்லி, நவ. 24-

ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் ராணுவ வீரர்கள் 4 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து பாதுகாப்பு படையினர் கூறியதாவது:

ஜம்மு-காஷ்மீர் ரஜோரி மாவட்டம் தர்மசாலில் பாஜி மால் பகுதியில் தீவிரவாதிகள் மறைவிடம் குறித்த தகவலையடுத்து அந்த பகுதியை நேற்று முன்தினம் புதன்கிழமை முற்றுகையிட்டு ராணுவ வீரர்கள் சோதனை நடத்தினர்.

அப்போது, தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு



படையினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடைபெற்றது. துரதிருஷ்டவசமாக இந்த மோதலில் இரண்டு ராணுவ கேப்டன்கள் மற்றும் இரண்டு வீரர்கள் என மொத்தம் 4 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த வீரர் ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பாஜிமாலில் தாக்குதல் நடத்திய தீவிவராதிகளில் இருவர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் வழிபாட்டு தலத்தில் தஞ்சமடைந்துள்ளனர். நிலைமையை சமாளிக்க கூடுதல்படைகள் வரவழைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர். எல்லையோர மாவட்டங்களான ரஜோரி மற்றும் பூஞ்ச் பகுதிகளில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பயங்கரவாத சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

### ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்காவிட்டால்

# தமிழ் சாதி வாக்குகள் திமுகவுக்கு கிடைக்காமல் போகலாம் – எச்சரிக்கிறார் வேல்முருகன்

சென்னை : நவ. 24, ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்காவிட்டால் தமிழ் சாதி வாக்குகள் திமுகவுக்கு கிடைக்காமல் போய்விடும் என்று வேல்முருகன் எம்எல்ஏ எச்சரித்துள்ளார்.

பீகாரைத் தொடர்ந்து தமிழகத்திலும் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்என்றுகோரிக்கைகள் எழுந்திருக்கின்றன. பாமக உள்ளிட்ட கட்சிகள் இதனை வலியுறுத்தி தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கூட்டங்கள் நடத்திவருகின்றன. ஆனால் மாநில அரசு அது மத்திய அரசின் பணி என்று ஒதுங்கிக் கொண்டுள்ளது.

மத்திய அரசின் சார்பில் மக்கள் தொகை



கணக்கெடுக்கும்போது ஜாதிவாரி கணக்கெடுப்பும் சேர்த்து எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆனாலும் தமிழகத்தில் தனியாக ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலராலும் முன் வைக்கப்படுகிறது. தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் இது குறித்து அழுத்தமாக கோரிக்கை விடுத்து வருகிறார். ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால் தமிழ் ஜாதி வாக்குகளின் திமுகவுக்கு கிடைக்காமல் போகக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்குள் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவோம் என்று திமுக அரசு அறிவிக்க வேண்டும். அது குறித்து அறிவிப்பை திமுக வெளியிடாவிட்டால் பாஜகவும் திமுகவும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளதாகத்தான் கருத வேண்டி இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தஞ்சாவூர் கிங்ஸ் பொறியியல் கல்லூரியின் 18-வது பட்டமளிப்பு விழா

தஞ்சை,நவ.24-

தஞ்சையை அடுத்த புனல்குளம் கிங்ஸ் பொறியியல் கல்லூரியின் 18-வது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது, கல்லூரியின் முதல்வர் ஜே.அற்புத விஜய செல்வி பட்டமளிப்பு விழா அறிக்கை வாசித்து வரவேற்றார். கல்லூரியின் செயலாளர் உரு. இராசேந்திரன் தலைமையேற்று பட்டம் பெறுபவர்களுக்கு தலைமை உரை ஆற்றினார்.

கிங்ஸ் பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் மாணவ மாணவிகள் தங்களது பெற்றோர்கள் கையால் பட்டம்




பெறுவது வழக்கம் அதேபோல் இந்த ஆண்டும் 155 மாணவ,மாணவிகள் தங்களது பெற்றோர்கள் கையால் பட்டத்தை பெற்றது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது.மாணவ மாணவிகளின் பெற்றோர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

# தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் இராஜகோபுர கும்பாபிஷேக திருப்பணிக்கான பாலாலயம் நடைபெற்றது

தென்காசி,நவ.24-

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் சுவாமி திருக்கோவிலில்ராஜ கோபுர கும்பாபிஷேக திருப்பணிக்காக பாலாலயம் நடைபெற்றது.

வடக்கே உள்ள காசிக்கு நிகரானதும், ஆயிரம் ஆண்டுகள் பழமையானதுமான தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயத்தில் கடந்த 17.3.2006-ஆம் ஆண்டு 180 அடியும் 9 நிலைகளை கொண்ட ராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேம் நடைபெற்றது, அதனை தொடர்ந்து 16 ஆண்டுகள் கழித்து



மீண்டும் ராஜகோபுர கும்பாபிஷேகத்திற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தன பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றது மாலை இராஜகோபுர கலாகர்ஷணம், கும்பஸ்தாபனம் நடைபெற்றது, இரவு முதற்கால யாகசாலை பூஜை நடைபெற்றது, நேற்று காலை இரண்டாம் காலயாக சாலை பூஜை, தேவ பாராயணம் போன்ற பூஜைகள் நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் அருள்தரும் ஸ்ரீ உலகம்மன் உடனுறை அருள்மிகு ஸ்ரீ காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோவில் விமானங்கள் மற்றும் ராஜகோபுர பாலஸ்தாபனம் நடைபெற்றது.

பின்னர் தீபாராதனை நடந்தது, இவ்விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினரும்,காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவருமான எஸ். பழனி நாடார் செயல் அலுவலர் முருகன், மணியம் மூர்த்தி,மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன், நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், சந்தோஷ், நகரப் பொருளாளர் ஈஸ்வரன், நகர்மன்ற உறுப்பினர்கள் சுப்பிரமணியன், சங்கர சுப்பிரமணியன், லட்சுமண பெருமாள், நகர துணைத் தலைவர் தேவராஜன், உட்பட பக்தர்கள் திரளானோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# தேசிய சீனியர் ஹாக்கி சாம்பியன்ஷிப் பெங்கால், தெலங்கானா அணிகள் வெற்றி



**சென்னை : நவ. 24,**

**ஆடவருக்கான 13-வது தேசிய சீனியர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.**

இதன் 6-வது நாளான நேற்று முன்தினம் புதன்கிழமை 'ஏ' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சத்தீஸ்கர் 11-3 என்ற கோல் கணக்கில் குஜராத் அணியை வீழ்த்தியது. அந்த அணி சார்பில் ஜுனைத் அகமது 3 கோல்களும், சுக்தேவ் நிர்மல்கர் மற்றும் ஹோகேஷ்வர் ஆகியோர் தலா 2 கோல்களும் அலி அர்பஜ், அஜய் தண்டி, தவூஃபிக் அகமது, ரோஹித் ரஜக் ஆகியார் தலா ஒரு கோலும் அடித்தனர். சத்தீஸ்கர் அணிக்கு இது முதல் வெற்றியாக அமைந்தது. முதல் ஆட்டத்தில் தோல்வி அடைந்த அந்த அணி கால் இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. 'ஏ' பிரிவில் இருந்து ஹரியாணா 2 வெற்றிகளுடன் ஏற்கெனவே கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியிருந்தது.

'சி' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தாத்ரா & நாகர்ஹவேலி மற்றும் டாமன் & டையூ அணி 7-1 என்ற கோல் கணக்கில் பிஹார் அணியை வென்றது. பிஹார் அணிக்கு இது 2-வது தோல்வியாக அமைந்தது. அதேவேளையில் தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ அணி ஆறுதல் வெற்றியுடன் தொடரில் இருந்து வெளியேறியது. 'சி' பிரிவில் கர்நாடகா 2 வெற்றிகளுடன் கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. 'இ' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பெங்கால் - ஜம்மு & காஷ்மீர் அணிகள் மோதின. இதில் பெங்கால் 10-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பெங்கால் அணிக்கு இது 2-வது வெற்றியாக அமைந்தது.

எஃப் பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஜார்க்கண்ட் - சத்தீஸ்கர் அணிகள் மோதின. இதில் ஜார்க்கண்ட் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் கெர்கெட்டா பிரேம், அனுருத் பெங்ரா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். ஜார்க்கண்ட் அணிக்கு இது 2-வது வெற்றியாக அமைந்தது. 'ஹெஎச்' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தெலங்கானா 15-0 என்ற கோல் கணக்கில் அருணாச்சல பிரதேசத்தை தோற்கடித்தது.

# அல்டிமேட் கோ கோ போட்டி : சென்னை வீரர்கள் தேர்வு




**புவனேஷ்வர் : நவ. 24,**

**அல்டிமேட் கோ கோ சீசன் 2 அடுத்த மாதம் நடைபெற உள்ளது. இந்த தொடரில் ஒடிசா ஜக்கர்நாட்ஸ், தெலுங்கு யோதாஸ், சென்னை குயிக் கன்ஸ், ராஜஸ்தான் வாரியர்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், மும்பை கிலாடிஸ் ஆகிய 6 அணிகள் கலந்துகொள்கின்றன.**

இந்நிலையில் இந்த தொடருக்கான வீரர்கள் ஏலம் புவனேஷ்வரில் நடைபெற்றது. இந்த ஏலத்துக்காக 18 மாநிலங்களில் இருந்து மொத்தம் 290 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். இதில் இருந்து 145 வீரர்கள் ஏலம் எடுக்கப்பட்டனர். இதற்காக 6 அணிகளின் உரிமையாளர்கள் கூட்டாக ரூ.3.9 கோடி செலவிட்டனர்.

சென்னை குயிக் கன்ஸ் அணியானது சீசன் 1-ல் சிறப்பாக விளையாடிய அமித் பாட்டீல், மதன் மற்றும் ராம்ஜி காஷ்யப் ஆகியோரை ஏற்கனவே தக்கவைத்திருந்தது. இவர்களுடன் லட்சுமண் கவாஸ், ஆதர்ஷ் மோஹிதே, சச்சின் பார்கோ, ஜோரா சூரஜ், சூரஜ் லாண்டே, ஆதித்யா குடேல், துர்வேஷ் சாலுங்கே, சந்து சாவ்ரே, ஆகாஷ் கடம், நரேந்திர கட்கேட், முஸ்தபா பக்வான், அர்ஜுன் சிங், விஜய் ஷிண்டே, ஆஷிஷ் பட்டேல், எம்.முகிலன், ஆகாஷ் பால்யன், சுமன் பர்மான், பவன் குமார், கிரி ஆகியோரையும் சென்னை அணி ஏலத்தில் எடுத்தது.

# 21 ஆண்டுகளுக்கு பிறகு ஒரே படப்பிடிப்பு தளத்தில் ரஜினி, கமல் : வைரல் புகைப்படங்கள்



**சென்னை : நவ. 24,**

**21 ஆண்டுகளுக்குப் பிறகு ரஜினி மற்றும் கமலின் படங்கள் ஒரே ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டு வரும் நிலையில், அவர்கள் இருவரும் சந்தித்துக்கொண்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.**

ஷங்கர் இயக்கத்தில் கமல் நடிக்கும் 'இந்தியன் 2' படத்தின் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்தப் படத்தை லைகா மற்றும் ரெட் ஜெயன்ட் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள பிரசாத் ஸ்டூடியோவில் நடைபெற்று வருகிறது. இதற்கு அருகிலிருந்து மற்றொரு அரங்கில், ரஜினி நடிப்பில் த.செ.ஞானவேல் இயக்கும் 'ரஜினி170' படப்பிடிப்பு நடைபெறுகிறது. இந்தப் படத்தையும் லைகா நிறுவனமே தயாரிக்கிறது.

இந்நிலையில், கமல்ஹாசனின் 'இந்தியன் 2' படப்பிடிப்பு நடப்பதை அறிந்த ரஜினிகாந்த், 'இந்தியன் 2' ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு கமல்ஹாசனைச் சந்திக்க வருவதாகத் தெரிவித்துள்ளார். இதனையறிந்த கமல்ஹாசன் "என் நண்பனைச் சந்திக்க நானே வருகிறேன்" என காலை 8 மணிக்கே உடனடியாக 'ரஜினி170' ஷீட்டிங் ஸ்பாட்டிற்கு விசிட் அடித்து, ரஜினிக்கு சர்ப்ரைஸ் தந்துள்ளார்.

கமல்ஹாசனைக் கண்ட ரஜினிகாந்த் மகிழ்ச்சியில், அவரை கட்டித்தழுவிக் கொண்டார். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. இதனை லைகா நிறுவனம் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. முன்னதாக 'பாபா', 'பஞ்சதந்திரம்' படங்கள் இதே இடத்தில் ஷூட்டிங் நடைபெற்ற போது, இருவரும் சந்தித்துக்கொண்டனர். தற்போது 21 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இருவரும் ஒரே படப்பிடிப்பு தளத்தில். சந்தித்துள்ளனர்.

# சூர்யாவின் 'கர்ணா'வில் நயன்தாரா



**சென்னை : நவ. 24,**

**நடிகர் சூர்யா, 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். அடுத்து சுதா கொங்கரா இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி இருந்தது.**

இந்நிலையில் பிரபல இந்தி இயக்குநர் ராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ரா இயக்கும் படத்திலும் அவர் நடிக்க இருக்கிறார். இந்தப் படத்தின் மூலம் அவர் இந்தியில் அறிமுகமாகிறார்.

மகாபாரத கர்ணன் கதையை மையமாக வைத்து உருவாகும் இந்தப் படத்துக்கு 'கர்ணா' என்று தலைப்பு வைத்துள்ளனர். சூர்யா, கர்ணனாக நடிக்கிறார். இந்தப் படத்தில் நாயகியாக நடிக்க வைக்க திஷா பதானி, பிரியங்கா சோப்ரா உட்பட சில நடிகைகளை யோசித்துள்ளனர். இறுதியில் நயன்தாராவை நடிக்க வைக்க முடிவு செய்துள்ளனர். இந்தப் படம் இந்தியில் உருவானாலும் பான் இந்தியா முறையில் வெளியாக இருக்கிறது. இதற்காக தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் இருந்தும் நடிகர்களை நடிக்க வைக்க இருக்கின்றனர். இதன் படப்பிடிப்பு அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடங்குகிறது. எக்சஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிக்கும் இந்தப் படம் இரண்டு பாகங்களாக உருவாகிறது

# கைப்பந்து விளையாட்டில் ஆர்வமுள்ள பலருக்கு 'கடலூர் மெட்ரோ நண்பர்கள் கையுந்து கழகம்' இலவச பயிற்சி



**கடலூர் : நவ. 24,**

**கைப்பந்து (வாலி பால்) விளையாட்டில் ஆர்வமுள்ள பலருக்கு, 'கடலூர் மெட்ரோ நண்பர்கள் கையுந்து கழகம்' இலவச பயிற்சி வழங்கி வருகிறது.**

இதன் மூலம் பலர் அரசு பணியில் சேர்ந்துள்ளனர். கடலூர் வரதராஜன் நகர் பூங்காவில் இயங்கி வருகிறது 'கடலூர் மெட்ரோ நண்பர்கள் கையுந்து பந்து கழகம்.' கடந்த 1975-ம் ஆண்டு இக்கழகம் தொடங்கப்பட்டது. இதில், தற்போது 30 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கையுந்து கழகத்தின் செயலாளர் சிவா பாலசங்கர் தனது குழுவினருடன் இணைந்து பயிற்சி அளித்து வருகிறார்.

"நல்ல உடல் நலத்துடன், மன ஒருமைப்பாட்டை தரும் விதமாக, நாங்கள் விரும்பி பயின்ற, இந்த கைப்பந்து பயிற்சியை வளரும் இளையோருக்கு அளிக்கிறோம்" என்று இக்கழகத்தினர் தெரிவிக்கின்றனர். கடந்த 48 ஆண்டுகளாக தொடரும் இந்த கழகத்தினரின் சேவையால் காவல்துறை, மின்வாரியம், அரசு போக்குவரத்துக் கழகம், இந்தியன் ரயில்வே, ஸ்டேட் பேங்க் உள்ளிட்ட தேசிய வங்கிகள், உணவு பாதுகாப்பு கழகம், மத்திய சுங்க மற்றும் கலால், ரயில் பெட்டி தொழிற்சாலை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்டவைகளில் விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் 40 பேர் பணியில் சேர்ந்து, பணியாற்றி வருவதை இக்கழகத்தினர் பெருமையுடன் தெரிவிக்கின்றனர்.

பயிற்சி மைய வீரர் குருபிரசாத் இந்திய அணிக்காக தேர்வு செய்யப்பட்டு, ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று விளையாடி கடலூர் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். பெண்களை விளையாட்டில் ஊக்குவிக்கும் வகையில், 2022 -ம் ஆண்டு டிசம்பர் முதல் பெண்களுக்கான பயிற்சிப் பட்டறை தொடங்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடலூர் புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இக்கழகத்துடன் இணைந்து பயிற்சி பெற்று, மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இப்பள்ளியின் மாணவி கிருதிக்ஷா மாநில அளவில் தேர்ச்சி பெற்று, தற்போது ஒடிசாவில் நடைபெற உள்ள அகில இந்திய பள்ளிகளுக்கான கைப்பந்து போட்டியில் தமிழக அணிக்காக பங்கேற்க உள்ளார். இப்படி பலரை உருவாக்கி வரும் இந்தக் கழகம் பொன் விழாவில் அடியெடுத்து வைக்க உள்ளது. இதுபற்றி கையுந்து கழகத்தின் செயலாளர் சிவா பாலசங்கர் கூறுகையில, "விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டில், தமிழக மின்வாரியத்தில் பணியில் சேர்ந்தேன். விளையாட்டால் நான் ஆரோக்கியமாக உணர்கிறேன். 10 ஆண்டுகள் தொடர்ந்து, தமிழக மின்வாரியம் சார்பில் இந்திய அளவிலான மின்வாரிய அணியில் விளையாடினேன்.

கிராமப்பகுதி இளைஞர்களுக்கு இலவசமாக பயிற்சி அளித்து, அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற நோக்கத்தில் என் போல், கைப்பந்தில் ஆர்வம் உள்ள தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த மணியன் என்பவரை ஒருங்கிணைப்பாளராக கொண்டு, ரயில்வே துறையில் பணியாற்றும் மகாராஜா, விக்கி இருவரையும் துணை பயிற்சியாளர்களாக கொண்டு மற்றும் தனியார் துறையில் சேஃப்டி இன்ஜினீயர் ஆக பணியாற்றும் விக்னேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து இந்த முயற்சி தொடர்ந்து கொண்டிருக்கிறது. பலர் தொடர் பயிற்சி பெற்று மாநில, தேசிய அளவில் விளையாடி, சிறப்பிடம் பெற்று, அரசு பணியில் சேர்ந்துள்ளனர். தொடர்ந்து இலவச பயிற்சி அளித்து, தகுதியான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதே எங்களது கழகத்தின் நோக்கம்" என்கிறார்

# ஐசிசி தரவரிசையில் விராட் கோலி முன்னேற்றம்







**துபாய் : நவ. 24,**

**சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி பேட்ஸ்மேன்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது.**

இதில் சமீபத்தில் முடிவடைந்த உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் 3 சதங்களுடன் 765 ரன்கள் குவித்த இந்திய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி 791 புள்ளிகளுடன் ஓர் இடம் முன்னேறி 3-வது இடத்தை பிடித்துள்ளார். ஷுப்மன் கில் 826 ரேட்டிங் புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். பாகிஸ்தான் அணியின் பாபர் அஸம் 824 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார்.

இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா ஓர் இடம் முன்னேறி 4-வது இடத்தை அடைந்துள்ளார். உலகக் கோப்பை தொடரில் ரோஹித் சர்மா 597 ரன்கள் குவித்திருந்தார். உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் சதம் விளாசி ஆட்ட நாயகன் விருது வென்ற ஆஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் 28 இடங்கள் முன்னேறி 15-வது இடத்தை பிடித்துள்ளார். தென் ஆப்பிரிக்காவின் குவிண்டன் டி காக் 2 இடங்கள் பின்தங்கி 5-வது இடத்தில் உள்ளார்.

உலகக் கோப்பை தொடரில் 552 ரன்கள் குவித்த நியூஸிலாந்தின் டேரில் மிட்செல் 5 இடங்கள் முன்னேறி 6-வது இடத்தை அடைந்துள்ளார். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் கேசவ் மகாராஜ் முதலிடத்தில் தொடர்கிறார். ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் 4 இடங்கள் முன்னேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார். இந்தியாவின் முகமது சிராஜ் 3-வது இடத்திலும், ஜஸ்பிரீத் பும்ரா 4-வது இடத்திலும் தொடர்கின்றனர். குல்தீப் யாதவ் ஒரு இடத்தை இழந்து 6-வது இடத்தில் உள்ளார்.

# காலில் பிளேட் பொருத்திய நிலையில் ரிஸ்க் எடுத்து நடித்த யாஷிகா



**சென்னை : நவ. 24,**

**விநய் பரத்வாஜ் இயக்கத்தில் ரிச்சர்ட் ரிஷி, புன்னகை பூ கீதா, யாஷிகா ஆனந்த் நடித்துள்ள படம், 'சில நொடிகளில்'. இன்று திரைக்கு வருகிறது.**

பாடகியும், இப்படத்தின் இசை அமைப்பாளருமான தர்ஷனா கூறுகையில், 'எனக்கு 'பல்லேலக்கா' பாடல் மூலம் திரைப்பயணம் தொடங்கியது. பிறகு 'கருப்பு பேரழகா', 'ஆட்டக்காரா' உள்பட நிறைய பாடி, கடந்த 17 வருடங்களாக பாடகியாக மட்டுமே இருந்தேன். இசை அமைப்பாளராவேன் என்று நினைத்துப் பார்த்தது இல்லை. அதை 'சில நொடிகளில்' படம் நிறைவேற்றியுள்ளது. இந்த வாய்ப்பை வழங்கிய விநய் பரத்வாஜுக்கு நன்றி' என்றார்.

யாஷிகா ஆனந்த் கூறும்போது, 'நிஜத்தில் நான் எப்படி மாடலிங் செய்கிறேனோ, அப்படித்தான் இப்படத்திலும் நான் மாடலாக நடித்திருக்கிறேன். நான் மிகப்பெரிய திரில்லர் ஃபேன். அதனால் இப்படத்தின் கதை பிடித்து நடித்தேன். நான் அஜித் குமாரின் மிகப்பெரிய ஃபேன். ரிச்சர்ட் ரிஷியிடம் பேசும்போது, அஜித் குமாருக்கு சற்று நெருக்கம் ஆகியுள்ளேன் என்று நினைத்து சந்தோஷப்படுவேன்' என்றார். தயாரிப்பாளரும், நடிகையுமான புன்னகை பூ கீதா கூறுகையில், 'யாஷிகா ஆனந்த் அதிக ஒத்துழைப்பு கொடுத்து நடித்தார். ஒரு காட்சியில் பெட்டிக்குள் அவர் மடங்கி உட்கார வேண்டும். அவரது காலில் ஏற்கனவே பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. அப்படி உட்காருவது மிகவும் கஷ்டம். ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நிறைய நேரம் உட்கார்ந்து இருந்தார்' என்றார்.

வரலாறு சினிமா

# 'துருவ நட்சத்திரம்' படத்தை வெளியிட கவுதம் மேனனுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நிபந்தனை



**சென்னை : நவ. 24,**

**நடிகர் சிம்புவின் படத்துக்காக ஆல் இன் பிக்சர்ஸ் நிறுவனத்திடம் வாங்கிய அட்வான்ஸ் தொகையை இன்று காலை 10.30 மணிக்குள் திருப்பிக் கொடுக்க, இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனனுக்கு உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம், அவ்வாறு பணத்தைக் கொடுக்காவிட்டால் விக்ரம் நடித்துள்ள "துருவநட்சத்திரம்" படத்தை வெளியிடக் கூடாது என உத்தரவிட்டுள்ளது.**

கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கி, தயாரித்திருக்கும் "துருவ நட்சத்திரம்" திரைப்படத்தில் விக்ரம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படம் உலகம் முழுவதும் இன்று வெளியாக உள்ளது. இந்தப் படத்தை வெளியிட இடைக்கால தடை விதிக்கக்கோரி ஆல் இன் பிக்சர்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ள விஜய் ராகவேந்திரா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதில், "சிம்புவை நாயகனாக வைத்து "சூப்பர் ஸ்டார்" என்ற படத்தை இயக்குவதற்காக, கவுதம் வாசுதேவ் மேனன் தங்களது நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டார். அதற்கு முன்பணமாக கடந்த 2018-ம் ஆண்டு 2 கோடியே 40 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி அந்த பட வேலைகள் நடைபெறாத நிலையில் வாங்கிய முன்பணத்தை இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன் திருப்பித் தரவில்லை. எனவே எங்களிடம் பெற்ற தொகையை திருப்பி அளிக்காமல் துருவ நட்சத்திரம் படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி சி.சரவணன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராகவாச்சாரி, "துருவ நட்சத்திரம் படத்தின் விநியோக உரிமையை விற்பனை செய்ததன் மூலம் கவுதம் வாசுதேவ் மேனன் பணம் பெற்றுள்ளார். இருந்தபோதிலும், தங்களுக்கு பணத்தை திரும்ப அளிக்கவில்லை" என கூறினார்.

அப்போது கவுதம் வாசுதேவ் மேனன் சார்பில் வழக்கறிஞர் ரேவதி மணிவண்ணன் ஆஜராகி, படத்தின் வெளியீட்டு தேதி இரண்டு மாதங்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் படத்துக்கு தடைக்கோரி கடைசி நேரத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பணத்தை திருப்பி அளிக்காமல் படத்தை வெளியிடமாட்டோம் என்று உறுதியளிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இன்று காலை 10.30 மணிக்குள் 2 கோடியே 40 லட்ச ரூபாய் பணத்தை திருப்பி அளிக்க வேண்டும் என கவுதம் வாசுதேவ் மேனனுக்கு உத்தரவிட்டார். அவ்வாறு பணத்தைக் கொடுக்கவில்லை என்றால் துருவ நட்சத்திரம் படத்தை இந்தியா மற்றும் வெளிநாடுகள் என எங்கும் வெளியிடக்கூடாது என உத்தரவிட்டுள்ளார்.

# "நீதிமன்றம் விளையாட்டு மைதானம் அல்ல" மன்சூர் அலிகான் முன்ஜாமீன் கோரிய வழக்கில் நீதிமன்றம் அதிருப்தி



**சென்னை : நவ. 24,**

**தவறான காவல் நிலையத்தை வழக்கில் சேர்த்து மனுத்தாக்கல் செய்ய, நீதிமன்றம் விளையாட்டு மைதானம் அல்ல என்று நடிகர் மன்சூர் அலிகான் முன்ஜாமீன் கோரிய வழக்கில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.**

நடிகர் மன்சூர் அலிகான் தன்னைப்பற்றி சர்ச்சைக்குரிய வகையில் பேசியதற்கு நடிகை த்ரிஷா தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். இந்த நிலையில், மன்சூர் அலிகானுக்கு தமிழ் திரையுலகினர் பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து பெண்களை இழிவுபடுத்தி பேசுதல் உள்ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் சென்னை ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் துறையினர் நடிகர் மன்சூர் அலிகான் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மன்சூர் அலிகான் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி எஸ்.அல்லி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மன்சூர் அலிகான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், முன் ஜாமீன் மனுவை திரும்ப பெறுவதாக வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதி, எதற்காக மனுவை தாக்கல் செய்தீர்கள்? எதற்காக தற்போது திரும்ப பெறுகிறீர்கள்? என கேள்வி எழுப்பினர். அப்போது, எதிர் மனுதாரராக ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை சேர்ப்பதற்கு பதிலாக, தவறுதலாக நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தை சேர்த்துள்ளதால் மனுவை திரும்பப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் வழக்கை விசாரித்த நீதிபதி, நீதிமன்ற நேரத்தை வீணடிக்க வேண்டாம். நீதிமன்றம் விளையாட்டு மைதானம் இல்லை எனக்கூறி மனுவை வாபஸ் பெற அனுமதியளித்தார். இதையடுத்து மன்சூர் அலிகான் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புதிய மனு இன்று விசாரணைக்கு வருகிறது.

வரலாறு உலகம்



# மருத்துவமனைகளை பயங்கரவாத முகாம்களாக பயன்படுத்திய ஹமாஸ்

## வீடியோ ஆதாரம் வெளியிட்டது இஸ்ரேல்



**காசா : நவ. 24,**

**காசாவில் மருத்துவமனைகள் என்ற பெயரில் அவற்றின் கீழே சுரங்கங்கள் அமைத்து ஹமாஸ் பயங்கரவாத முகாமாக பயன்படுத்தி வந்ததாக இஸ்ரேல் வீடியோ வெளியிட்டு மீண்டும் குற்றம்சாட்டியுள்ளது.**

ஹமாஸுக்கு எதிரான போர் பிரகடனத்தை வெளியிட்டதிலிருந்து எதிர்தாக்குதல் திட்டமிடலுக்காக காசாவில் உள்ள மருத்துவமனைகளை ஹமாஸ் பயன்படுத்தி வருவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை கூறி வருகிறது இஸ்ரேல். காசாவின் அல் ஷிபா மருத்துவமனையின் பரந்து விரிந்த அடிப்பரப்பில் சுரங்கம், பதுங்கு குழிகளில் ஹமாஸ் தனது கட்டுப்பாட்டு மையத்தை அமைத்திருந்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசியிருக்கும் இஸ்ரேல் ராணுவப் படை (ஐடிஎஃப்) செய்தி தொடர்பாளர் அட்மிரல் டேனியல் ஹக்காரி, "காசா மருத்துவமனை பயங்கரவாத முகாமாக பயன்படுத்தப்பட்டது. ஹமாஸ் தனது நோக்கத்தை நிறைவேற்றிகொள்வதற்காக மருத்துவமனைகளை கேடயமாக பயன்படுத்துகிறது. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் தான் போர். காசாவில் உள்ள மக்களுடன் அல்ல. அந்நகரில் உள்ள மருத்துவமனைகளுக்கு அடியில் ஹமாஸ் சுரங்கங்களை அமைத்து, தாக்குதல் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது" என தெரிவித்துள்ளார்.

தனது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல்-ஷிபா மருத்துவமனையின் அடிப்பகுதியில் ஹமாஸ் நிறுவியிருந்த சுரங்கம் குறித்த வீடியோ காட்சிகளை இஸ்ரேல் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்டது. இந்த வீடியோ காட்சிகள் வெளிநாட்டுசெய்தியாளர்கள் வசமும் வழங்கப்பட்டது. அந்த வீடியோவில் கற்களைக் கொண்டு 150 மீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள சுரங்கத்தின் முடிவில் குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் குளிர்சாதன வசதி, சமயலறை, குளியலறை, ஸ்டீல் கட்டில் ஆகியவை உள்ளன.

மருத்துவமனையை பயங்கரவாத தாக்குதல் திட்டத்துக்கான கேடயமாக ஹமாஸ் பயன்படுத்தி வருவதை உலக நாடுகள் கவனிக்க வேண்டும் என இஸ்ரேல் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா சீன அரசு தீவிர கண்காணிப்பு

## அறிக்கை கோரும் உலக சுகாதார நிறுவனம்



**பீஜிங் : நவ. 24,**

**சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவிவருவதால் அதுகுறித்து அந்நாட்டு சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. மேலும் இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஊடகச் செய்திகளின்படி சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு மிக அதிகமான அளவில் அதிகரித்துள்ளது. குழந்தைகள் அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்துவரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக நவம்பர் 12-ல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப் புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாகத் தெரிகிறது. இந்தச்சூழலில் SARS-CoV-2 வைரஸ் (கோவிட் தொற்று) பரவல், இன்ஃப்ளுயன்சா வைரஸ் பரவல், இன்னும்பிற தொற்றுகள் ஆகியனவற்றின் நிலவரம் குறித்து தெளிவான அறிக்கை அளிக்கும்படி உலக சுகாதார நிறுவனம் சீன அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. குழந்தைகளைப் பாதிக்கும் RSV வைரஸ், மைகோப்ளாஸ்மா நிமோனியா ஆகியனவற்றைப் பற்றியும் அறிக்கை கோரியுள்ளது.

கடந்த 2019 டிசம்பரில் சீனாவில் பரவிய கோவிட்-19 தொற்றின் காரணமாக உலகம் முழுவதும் பல லட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தற்போது பரவும் மர்ம நிமோனியா தொற்று உலக நாடுகளைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

# சீனாவில் வீடு சுத்தமாக இல்லையா இனிமேல் அபராதம்தான்



**சீனா : நவ. 24,**

**சீனாவின் தென்மேற்கில் உள்ளதுசிசுவான்பிராந்தியம். ஆசிய கண்டத்தின் நீளமான நதியான யாங்சே, சிச்சுவான் பிராந்தியம் வழியாக பயணிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

சிச்சுவான்பிராந்தியத்தின் தெற்கில் உள்ளது ப்யூகே உள்ளாட்சி பகுதி. இப்பகுதியின் உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகள் புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்துள்ளனர். இச்சட்டத்தின்படி பொதுமக்கள் தங்கள் வீடுகளில் பாத்திரங்களை துலக்காமல் வைத்திருந்தாலோ, படுக்கையை அலங்கோலமாக வைத்திருந்தாலோ, உணவு பண்டங்களை பயன்படுத்தும் போதுசூழ்நிலை சுகாதாரமற்று இருந்தாலோ, அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு இனிமேல் அபராதம் விதிக்கப்படும்.

பொது மற்றும் வசிப்பிட சுகாதாரத்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, "வாழும்சூழலை மேம்படுத்தும் தரமான வழிமுறைகள்" என ஒரு கொள்கையை ப்யூகே உள்ளாட்சி வகுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக இந்த அறிவிப்பு வந்துள்ளது. மேலும், இதன் ஒரு தொடர்ச்சியாக மக்களின் நடத்தையில் 14 வித அம்சங்களுக்கு கட்டுப்பாடுகளையும் இந்த அமைப்பு விதித்துள்ளது.

இனிமேல், உள்ளாட்சி அதிகாரிகள் பொதுமக்களின் வீடுகளுக்கு திடீரென சோதனையிட வருவார்கள். அவ்வாறு வரும் போது வீடுகளில் ஒட்டடை, குப்பைகள், பறவைகள் மற்றும் விலங்குகளின் கழிவுகள் உள்ளிட்ட அசுத்தமான விஷயங்கள் ஏதேனும் கண்ணில் பட்டால் அந்த வீட்டினருக்கு அபராதம் விதிக்கப்படும். ஒரு முறை அபராதம் விதிக்கப்பட்ட ஒரு வீட்டில் மறுமுறையும் இதே சூழ்நிலை நிலவினால் அபராத தொகை இரட்டிப்பாக்கப்படும்.

"ஒரு விவசாயியின் வீட்டிற்கு வந்தபோது அங்கு நிலவும் சுகாதார சூழ்நிலை பார்க்க சகிக்கும்படியாக இல்லை. கொசுக்கள், நாய்கள் சூழ்ந்திருக்க ஒரு அசுத்தமான சூழலே நிலவுகிறது. அபராதத்தால் மட்டுமே இதை தடுக்க முடியாது என நாங்கள் உணர்ந்திருக்கிறோம். ஆனால், அபராதம் மக்களுக்கு ஒருஎச்சரிக்கையாக இருக்கும்" என இந்த அறிவிப்பு குறித்து உள்ளாட்சி அமைப்பின் துணைத்தலைவர் தெரிவித்துள்ளார். உலகெங்கிலும் பலர், இந்த உத்தரவிற்கு ஆதரவாகவும், எதிராகவும் சமூக வலைதளங்களில் தங்கள் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# அதிகரிக்கும் தலிபான் தாக்குதல் அச்சத்தில் கலாஷ் மக்கள்



**பாகிஸ்தான் : நவ. 24,**

**இமயமலைக்கு மேற்கே, மத்திய மற்றும் கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து வடகிழக்கு பாகிஸ்தான் வழியாக தென்கிழக்கு டஜிகிஸ்தான் வரை நீண்டு செல்வது இந்து குஷ் மலைத்தொடர்.**

சுமார் 800 கிலோமீட்டர் நீளம் உள்ள இந்த மலைத்தொடரில் மலையேறுதலுக்காகவும் இங்குள்ள பள்ளத்தாக்கு பகுதிகளில் சுற்றுலாவிற்கும் அயல்நாட்டினர் வருவது வழக்கம். பாகிஸ்தானுக்கு உட்பட்ட இந்த மலைத்தொடரின் இயற்கை அழகு மிகுந்த பள்ளத்தாக்கு பகுதி, கலாஷ். கலாஷ் பள்ளத்தாக்கை சேர்ந்த பழங்குடி இன மக்கள் ஆடு வளர்ப்பு மற்றும் விவசாயம் ஆகிய தொழில்களில் ஈடுபடுகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து வருவாய் ஈட்டுகின்றனர். கலாஷ் பள்ளத்தாக்கு பாகிஸ்தானுக்கு ராணுவ ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி.

சில நாட்களுக்கு முன் ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்ந்த பாகிஸ்தானி தலிபான் எனும் பயங்கரவாத அமைப்பை சேர்ந்த சுமார் 200 பேருக்கும் மேல் அந்த பகுதியை ஆக்ரமிக்க முனைந்து அதிகாலையில் ஆயுதங்களுடன் வந்தனர். அப்பகுதியில் உள்ள பாறைகள் மற்றும் மரங்கள் பின்னால் ஒளிந்து கொண்டு பாகிஸ்தானுக்குள் தாக்குதல் நடத்த தயாராகினர்.

இதையறிந்த பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் உடனடியாக ஒரு படையை அனுப்பி தலிபான்களின் திட்டத்தை முறியடித்தனர். இதில் பாகிஸ்தான் தரப்பில் 5 பேரும், தலிபான் தரப்பில் 20 பேரும் உயிரிழந்தனர். 2021லிருந்து தங்கள் நாட்டின் மீது ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவதை அந்நாடு தடுக்க தவறி விட்டதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகிறது. ஆனால், ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் அரசு இதனை மறுத்து வருகிறது. கலாஷ் பள்ளத்தாக்கை தலிபான் கைப்பற்றினால், பாகிஸ்தான் மீது அடுத்தடுத்த தாக்குதல் நடத்துவது எளிதாக இருக்கும் என்பதால் இதனை கைப்பற்ற தொடர்ந்து தலிபான் முயன்று வருகிறது.

இந்நிலையில், கலாஷ் பள்ளத்தாக்கில் வசிக்கும் பூர்வகுடி மக்கள் இத்தனை நாட்கள் அமைதியாக வாழ்ந்து வந்த தங்கள் வாழ்க்கை குறித்து அச்சப்பட துவங்கியுள்ளனர். கிரேக்க பேரரசரான அலெக்ஸாண்டரின் வம்சமாக தங்களை அடையாளப்படுத்தி வரும் கலாஷ் மக்களின் கலாச்சாரம், பாகிஸ்தானிய கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டது. பல பெயர்களிலும் பல வடிவங்களிலும் ஆண், பெண் தெய்வங்களை வழிபட்டு, விவசாயத்தை போற்றும் விதமாக பண்டிகைகள் கொண்டாடும் இந்த அமைதியான மக்கள், தலிபானால் மதமாற்ற அச்சுறுத்தல்களுக்கு ஆளாவதாக வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள பண்ணை வேலைகள், விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட அவர்களின் வாழ்வாதார பணிகள், தலிபான்களின் தாக்குதல்களால் சீர்குலைந்து வருவதால் தங்கள் எதிர்காலம் குறித்து அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர். தலிபான் தாக்குதல்கள் இனியும் நடந்தால், அதை வெற்றிகரமாக முறியடிப்போம் என பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத குடியேற்றத்தில் 3-வது இடத்தில் இந்தியர்கள் அமெரிக்க பிஇடபிள்யூ மையம் தகவல்



**புதுடெல்லி : நவ. 24,**

**அமெரிக்காவில் உள்ள பிஇடபிள்யூஆராய்ச்சிமையம் நடத்திய ஆய்வு விவரங்கள் வெளியிடப்பட்டன. அதில் கூறியிருப்பதாவது: அமெரிக்காவுக்குள் பல்வேறு நாட்டவர் சட்டவிரோதமாக குடியேறுவது அதிகரித்து வருகிறது. அந்த வரிசையில் 3-வது இடத்தில் இந்தியர்கள் உள்ளனர்.**

கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் முதல் 2023-ம் ஆண்டு செப்டம்பர் வரை 96,917 இந்தியர்கள் சரியான ஆவணங்களின்றி அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். 2019 முதல் 2020-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தை ஒப்பிடும்போது இது 5 மடங்கு அதிகமாகும். அந்த ஆண்டில் 19,883 இந்தியர்கள் மட்டுமே சட்டவிரோதமாகக் குடியேறினர்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களில் முதல் இடத்தில் மெக்சிகோ நாட்டவர் உள்ளனர். 2017 முதல் 2021-ம் ஆண்டு வரை 9 லட்சம் மெக்சிகோ நாட்டவர், அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளனர். அதற்கடுத்து 2-வது இடத்தில் எல் சால்வடார் நாட்டைச் சேர்ந்த 8 லட்சம் பேர், அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். 3-வது இடத்தில் இந்தியர்கள் (7.25 லட்சம்) உள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

# தடம் புரண்ட சரக்கு ரயில்

## ரசாயன நச்சுப்பொருள் எரிந்து பெட்டிகள் நாசம்



**கெண்டகி : நவ. 24,**

**அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தில் சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்ட விபத்தில் ஆபத்தான ரசாயனங்கள் எரிந்து வருவதால்அங்குஅவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.**

அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தில் சிஎஸ்எக்ஸ் என்ற ரயில் நிறுவனத்திற்கு சொந்தமான ரயில் ஒன்று ரசாயனங்களை ஏற்றுக்கொண்டு லிவிங்ஸ்டன் நகரை நோக்கி சென்று கொண்டிருந்தது. லிவிங்ஸ்டன் நகருக்கு முன்னாக எதிர்பாராத விதமாக ரயில் தடம் புரண்டது.

இதில் ரயிலில் இணைக்கப்பட்டிருந்த 16 பெட்டிகளும் தடம் புரண்டு விபத்திற்கு உள்ளானது. இந்த விபத்தின் போது ரயிலில் இரண்டு பெட்டிகளில் இருந்த சல்ஃபர் என்ற நச்சுப் பொருள் காற்றுடன் வினையாற்றி தீப்பிடித்து எரிந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் சல்ஃபர் டை ஆக்சைடு என்ற நச்சுப்புகை பரவத்துவங்கியது. இது குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக மீட்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தண்ணீர் உள்ளிட்ட வழக்கமான பொருட்களைக் கொண்டு இந்த தீயை அணைக்கமுடியாதுஎன்பதால், ரசாயனத்தால் ஏற்படும் தீ விபத்தை அணைப்பதற்கான சிறப்பு உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு தீயை அணைக்கும் பணிகள் நடைபெற்றது. தற்போதைக்கு தீ கட்டுக்குள் இருந்தாலும், தொடர்ந்து நச்சுப் புகை வெளியேறி வருவதால் அந்த பகுதி முழுவதும் அவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

ரயில்தடம்புரண்டஇடத்தின் அருகே இருந்த வீட்டிலிருந்த மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப் பட்டுள்ளதாகவும், நிலைமை தற்போதைக்கு கட்டுக்குள் இருப்பதாகவும் அம்மாகாண ஆளுநர் ஆண்டி பெஷார் தெரிவித்துள்ளார். இருப்பினும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் விபத்து காரணமாக அருகாமையில் உள்ள நெடுஞ்சாலையையும் அதிகாரிகள் மூடியுள்ளனர். இதனால் பல நூறு கிலோ மீட்டர்கள் சுற்றிவாகனஓட்டிகள் பயணித்து வருகின்றனர்.

# இந்தியர்களுக்கு விசா தேவையில்லை

## வியட்நாம் அனுமதி



**வியட்நாம் : நவ. 24,**

**இலங்கை, தாய்லாந்து நாடுகளைத் தொடர்ந்து வியட்நாமும் இப்போது இந்தியர்களுக்கு விசா இல்லாத அனுமதியை வழங்கவுள்ளது.**

வியட்நாம் கலாச்சாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சர் நுயன் வான் ஹாங் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் சீனா போன்ற முக்கிய நாடுகளுக்கு விசா இல்லாத குறுகிய கால பயண அனுமதியை வழங்கவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதுவரை, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், டென்மார்க், சுவீடன் மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளின் குடிமக்கள் மட்டுமே விசா இல்லாமல் வியட்நாமுக்குள் நுழைய முடியும். இந்த விசா இல்லாத நாடுகளின் குடிமக்கள் வியட்நாமில் தங்கியிருக்கும் காலம் மூன்று முறை நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது 45 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கை, தாய்லாந்து ஆகிய இரு அண்டை நாடுகளும் இந்திய குடிமக்களுக்கு விசா தேவையில்லை என அறிவித்தன. நவம்பர் 10ம் தேதி முதல், இந்தியப் பயணிகளுக்கான விசா தேவையை தாய்லாந்து ரத்து செய்தது. இந்த உத்தரவாதத்துடன், இந்திய சுற்றுலாப் பயணிகள் தாய்லாந்தில் 30 நாட்கள் தங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்திய சுற்றுலாப் பயணிகள் அடுத்த ஆண்டு மே 10 வரை தாய்லாந்தில் விசா தள்ளுபடி வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவை அதிகரித்தால் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து பரிசீலிப்பதாகவும் தாய்லாந்து அரசு கூறியுள்ளது.

இந்த ஆண்டு அக்டோபரில், இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு விசா இல்லாத நுழைவுக்கான முன்னோடி திட்டமாக இலங்கையும் தொடங்கியது. இந்த நடவடிக்கை மார்ச் 31, 2024 வரை அமுலில் இருக்கும். அதாவது இந்திய பயணிகள் இந்த காலகட்டத்தில் விசா இல்லாமல் இலங்கைக்கு செல்லலாம். அந்த வகையில் இனி வியட்நாமுக்கும் விசா இல்லாத பயணத்தை இந்தியர்கள் மேற்கொள்ள முடியும்.

## அமெரிக்காவில் சோகம்

# சோதனைச் சாவடியில் கார் வெடித்ததில் 2 பேர் பலி



**வாஷிங்டன் : நவ. 24,**

**கனடாஎல்லைப்பகுதியில் நயாகரா நீர்வீழ்ச்சி அருகே நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் இருவர் பலியானதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.**

அமெரிக்க - கனடா சர்வதேச எல்லைப்பகுதியில் முக்கிய நகரங்களை இணைக்கும் ரெயின்போ பாலம் உள்ளது. எப்போதும் பரபரப்பாகவே காணப்படும் இந்தபாலத்தின் அருகே நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு குண்டு வெடிப்பு நடந்ததாக கூறப்படுகிறது. இப்பகுதியில் நயாகரா நீர்வீழ்ச்சி அருகே வானத்தில் சென்று கொண்டிருந்த காரில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடிப்பு நடந்துள்ளதாக புலனாய்வு ஏஜென்சி தெரிவித்துள்ளது.

இதையடுத்து உடனடியாக அமெரிக்க போலீஸார் அந்த பகுதியை சூழ்ந்து, தடயங்களை சேகரித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் காரில் இருந்த இருவர் பலியானதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இது பயங்கரவாத தாக்குதலா என்ற கோணத்தில் உரிய விசாரணை நடத்திட நியூயார்க் கவர்னர் காதே ஹூச்சூல், எப்.பி.ஐ. போலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவத்தை தொடர்ந்து அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கயிற்றில் நடந்தவாறு கத்திகளால் வித்தை காட்டி உலக சாதனை படைத்த சர்க்கஸ் கலைஞர்




**கலிபோர்னியா : நவ. 24,**

**அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள போவே பகுதியை சேர்ந்தவர் எட்கர் யுட்கேவிச்.**

சர்க்கஸ் கலைஞரான இவர் கயிற்றில் நடந்தவாறு 3 கத்திகளை பயன்படுத்தி நேர்த்தியாக வித்தை காட்டி கின்னஸ் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளார். இதுகுறித்த வீடியோசமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில், குறிப்பிட்ட தூரம் கட்டப்பட்ட கயிற்றின் மீது எட்கர் யுட்கேவிச் நடந்து செல்கிறார்.

அப்போது அவரது கையில் 3 கத்திகளை வைத்து அவற்றை வீசி வித்தை காட்டி பார்வையாளர்களை அசத்துகிறார். இவ்வாறு வித்தை காட்டியவாறே 34 அடி மற்றும் 4 அங்குல தூரத்தை கடந்து சாதனையை மேற்கொண்டுள்ளார்.

# உலகின் ஒல்லியான ஓட்டல்



**இந்தோனேஷியா : நவ. 24,**

**உலகின் பல்வேறு நாடுகளிலும் பிரமாண்டமான ஓட்டல்கள், அதில் உள்ள வசதிகள் குறித்த வீடியோக்கள் இணையத்தில்பரவிவருகிறது.**

இந்நிலையில் உலகின் ஒல்லியான ஓட்டல் என்று இந்தோனேஷியாவில் உள்ள ஒரு ஓட்டல் குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அரிஇந்திரா என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த கட்டிடம் 5 தளங்களை கொண்டுள்ளது. 9 அடி அகலத்துடன் 7 அறைகள் மட்டும் கொண்டுள்ள இந்த ஓட்டலில் ஒரு ஓய்வு அறையும் உள்ளது. குறுகிய இடத்தின் காரணமாக கட்டிடத்தை வடிவமைப்பதில் சவாலை எதிர் கொண்டதாக கட்டிட வடிவமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கூறுகையில், வசதியாக வாழ்வதற்கும், நடமாடுவதற்கும் உண்மையில் எவ்வளவு சிறிய இடம் தேவை என்று விருந்தினர்கள் வியக்கும் வகையில் இந்த ஓட்டல் வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.



# உங்களைத் தேடி, உங்கள் ஊரில் மக்கள் குறை கேட்கும் தமிழக அரசின் புதிய திட்டம் அறிமுகம்

# உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி பாத்திமா பீவி காலமானார்





# அமெரிக்காவில் இந்திய தூதரகம் மீது தாக்குதல் பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் என்ஐஏ சோதனை


| சென்னை / புதுக்கோட்டை | 24.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

24.11.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**சக்கரி தைலர்** , அமெரிக்காவின் 12வது அரசுத்தலைவர் (பி.1784) (இ.1850)



**தத்தினேனி பிரகாஷ் ராவ்** , தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் (பி.1924) (இ.1992)



**மான்டெக் சிங் அலுவாலியா,** , இந்தியப் பொருளியலாளர், ஆட்சிப் பணி அதிகாரி (பி.1943)



**அனுர குமார திசாநாயக்க** , இலங்கை அரசியல்வாதி (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

**வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்** , தமிழக இந்தியவியலாளர் (பி.1896) (இ.1953)



**ஏ. எம். ஏ. அசீஸ்** , இலங்கை கல்வியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1911) (இ.1973)



**தனுஷ்கோடி ராமசாமி** , தமிழக எழுத்தாளர் (பி.1945) (இ.2005)

